வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 18.08.2021 புதன்கிழமை | இதழ் : 257 | பக்கங்கள் : 16




## ஒரே நாளில் 171 பேர் உயிரிழப்பு நாளாந்தம் உச்சம் தொடும்

### கொரோனா மரண மொத்த எண்ணிக்கை 6,434

கொழும்பு, ஓக. 18

நாட்டில் மேலும் 171 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர். இதுவே இதுவரை ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா மரணங்களின் எண்ணிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த மரணங்கள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 434 ஆக அதிகரித்துள்ளது.

15

## 3,500ஐ கடந்தது நாளாந்த தொற்றாளர்

கொழும்பு, ஓக. 18

நாட்டில் மேலும் 3 ஆயிரத்து 555 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டில் இதுவரையில் அடையாளம் காணப்பட்ட மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்

15

# இரு வாரங்கள் நாட்டை முடக்குமாறு அனைவரும் இணைந்து கோருவோம்

## சுகாதார கட்டமைப்பு சிதைவடைந்தால் பாரிய அனர்த்தத்துக்கு வழிவகுக்கும் என்கிறார் சஜித்



கொழும்பு, ஓக. 18

நாட்டை கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்து உயிரிழப்புகளை கட்டுப்படுத்த வேண்டுமாயின் உடனடியாக இரண்டு வாரங்களுக்கு நாட்டை முடக்க வேண்டியது அவசியம். இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

15

## தொற்றாளர்களால் நிரம்பி வழியும் வடக்கு, கிழக்கு வைத்தியசாலைகள்

### சபையில் எடுத்துரைத்தது கூட்டமைப்பு

கொழும்பு, ஓக.18

வடக்கு, கிழக்கில் அனைத்து வைத்தியசாலைகளும் கொரோனாத் தொற்றாளர்களால் நிரம்பி வழிகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பி

15

### அனைத்து கட்சி கூட்டம்:

## ரணிலின் அழைப்புக்கு ஜனாதிபதி சாதக பதில்!

கொழும்பு, ஓக. 18

அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி தற்போதைய கோவிட் 19 நிலவரம் தொடர்பில் ஆராயுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஜனாதிபதி

15

## ஆங்கிலத்தில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் பிரதிகள்

### சபையில் நேற்று சர்ச்சை

கொழும்பு, ஓக 18

கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற் பாடுகள் சட்டமூலம் தொடர் பான உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரதி ஆங்கிலத்தில் மாத்திரம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமை

15

## யாழில் நேற்றும் மூவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மேலும் மூவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த புத்தூர் கிழக்கைச் சேர்ந்த 62 வயது ஆண் ஒருவரும்,

15

## யாழ்ப்பாணத்தில் 69 பேர் உட்பட வடக்கில் நேற்று 132 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணத்தில் 69 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 132 பேர் நேற்றைய தினம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் 610 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே, 132 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்படி, யாழ்.

15

## ரிஷாத் பேச அனுமதி மறுப்பு; சபையில் கடும் சர்ச்சை

கொழும்பு, ஓக. 18

116 நாட்களாக தன்னை தடுத்து வைத்திருப்பது தொடர்பில் சபையில் தெரிவிக்க முற்பட்ட ரிஷாத் பதியுதீனுக்கு அரச தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து சபாநாயகரும் ரிஷாத் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதிக்காததால் சபையில் கடும் சர்ச்சை ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற

15

## ஒருபுறம் கொரோனாவின் மறுபுறம் இராணுவத்தின் வெறியாட்டம்

### பாராளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. சீற்றம்

கொழும்பு, ஓக. 18

கொரோனாவின் வெறியாட்டம் ஒரு புறம் நடக்கும்போது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் வெறியாட்டமும் நடக்கின்றது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி. செல்வராசா கஜேந்திரன் குற்றஞ் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குற்றஞ் சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

“கொரோனா வெறி

15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு காட்டில் சிங்க ராஜாவின் ஆட்சியில் எல்லா மிருகங்களும் ஒற்றுமையாக வசித்து வந்தன. தினமும் ஒரே மாதிரி வாழ்க்கை இருந்ததால் மிருகங்களெல்லாம் சலித்துப் போய் விரக்தியுடன் இருந்தன.

இதைக் கவனித்த சிங்க ராஜா, எல்லா மிருகங்களும் சந்தோசமாக வாழ என்ன வழி செய்யலாம் என யோசித்து, அனைத்து மிருகங்களையும் ஒன்றாகக் கூட்டியது.

ஒவ்வொரு மிருகங்களும் தனக்குத் தெரிந்த நல்ல பகிடி ஒன்று சொல்ல வேண்டும். ஆனால், நீங்கள் சொல்லும் பகிடிக்கு யாராவது ஒரு மிருகமாவது சிரிக்காமல் இருந்தால் பகிடி சொன்ன மிருகத்தை நான் அடித்துக் கொன்று விடுவேன். ஒவ்வொருவராக வந்து பகிடி சொல்லுங்கள் என்றது.

முதலில் குரங்கை சிங்கம் அழைத்தது. பயந்து கொண்டே வந்த குரங்கு, மிகவும் அருமையான பகிடி ஒன்று சொல்லியது. எல்லா மிருகங்களும் விழுந்து விழுந்து சிரித்தன. சிங்கமும் சிரித்துக் கொண்டே நிமிர்ந்து பார்க்க ஆமை மட்டும் சிரிக்காமல் இருந்தது. ஒரு மிருகம் சிரிக்காததால், சிங்கம் குரங்கை அடித்துக் கொன்றது.

அடுத்து, கரடி. கரடியும் வந்து குரங்கைவிட நல்ல பகிடி ஒன்று சொன்னது. அதற்கும் ஆமை சிரிக்கவே யில்லை. கரடியும் செத்தது.

பின்னர் கழுதை வந்து, “ஒரு ஊரில” என்று சொல்ல ஆரம்பிக்கு முன்னரே ஆமை விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கியது.

சிங்கத்துக்கும் மற்றைய மிருகங்களுக்கும் ஆச்சரிய மும் கோபமும் வந்தது.

சிங்கம் ஆமையிடம் கேட்டது,

“இவ்வளவு நேரமும் சிரிக்காம இருந்திட்டு, இப்ப கழுதை சொல்ல ஆரம்பிக்கவே இல்லை, ஆனா நீ இப்படி விழுந்து, விழுந்து சிரிக்கிறியே” என்று.

அதுக்கு ஆமை சொல்லியது,

“இல்லை, குரங்கு சொன்ன பகிடிக்கு சிரிப்பு வந்திச்சு, அதுதான் சிரிச்சேன்.”

கொரோனாவின் கோரத்தாண்டவம் குறித்து இந்தப் பத்தியில் மாத்திரமல்ல, ஈழநாடு தனது தலையங்கம் உட்பட பல கட்டுரைகளிலும் வலியுறுத்தி வந்திருக்கின் றது.

கொரோனாவின் பாதிப்புக் குறித்து எமது தலைவர்கள் மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுகின்ற பணியைச் செய்யவேண்டும் என்பதையும் இந்தப் பத்தியில் பலதடவை குறிப்பிட்டிருந்தோம்.

அண்மையில் ஈழநாடு ஆசிரியர், தனது தலையங் கத்தை பத்திரிகையின் முன்பக்கத்தில் பிரசுரித்து ஈழநாடுவின் சமூக அக்கறையை வெளிப்படுத்தி யிருந்தார்.

இத்தனை கால மௌனத்திற்குப் பின்னர், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ் வரன் நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

“அரசியல் காழ்புணர்வுகளைத் தாண்டி கொரோனா எனும் பேரிடரிலிருந்து நாட்டையும், உயிர்களையும் பாதுகாத்து, வீழ்ந்து போகும் பொருளாதார நிலையிலி ருந்தும் மீண்டெழுவதற்கு ஒன்றுபட்டு நிற்போம்”, என்று விக்னேஸ்வரன் விடுத்திருக்கின்ற அறைகூவல் பலரையும் திரும்பிப்பார்க்க வைத்திருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு செய்கின்ற அநியாயங்களால்தான் நாடு பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கிறது என்கின்ற தனது வழமையான அறிவித்தல்களில் நின்றும் சற்று மாறாக, காழ்ப்புணர்வுகளை தாண்டி நாட்டின் பொருளாதாரத்தை மீண்டெழச் செய்ய ஒன்றுபடுவோம் என்கிறார் விக்னேஸ்வரன்.

நீதயரசராக பணியாற்றிய கால சிந்தனை இது.

அரசியல் காழ்ப்புணர்வுகளைத் தாண்டி என்று அவர் குறிப்பிட்டிருப்பதன் மூலம் ஓர் உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். அரசியல் காழ்ப்புணர்வு அவருக்கும் இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருப்பதாகவே அர்த்தப்படவேண்டியிருக்கின்றது.

நல்ல விடயம்தான் - கொரோனா நெருக்கடி, பொருளாதார நெருக்கடிக்கு மாத்திரமல்ல, நமது உரிமைகள், அடையாளங்களை மீட்டெடுப்பதிலும் காழ்ப்புணர்வுகளை தாண்டி பயணிக்க அவர் தயாராக வேண்டும்.

**- ஊர்க்குருவி**

# வவுனியாவில் மேலும் 59 பேருக்குத் தொற்று

*வவுனியா, ஓக. 18*

வவுனியாவில் மேலும் 59 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப் பட்ட கொரோனாத் தொற்றாளர் களுடன் தொடர்புகளைப் பேணி யோர், வவுனியா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட் டோர் மற்றும் எழுமாறாக மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரி சோதனைகளின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில், செல்வாநகர் பகுதியில் இருவருக்கும், பாரதிபுரம் பகுதி யில் மூன்று பேருக்கும், கூமாங் குளம் பகுதியில் மூன்று பேருக் கும், நெடுங்குளம் பகுதியில் ஒருவ ருக்கும், சிறுவர் இல்லத் தைச் சேர்ந்த இரண்டு பேருக்கும், சுந்தரபுரம் பகுதியில் ஒருவருக்கும், பண்டாரிக்குளம் பகுதியில் இரு வருக்கும், எல்லப்பர்மருதங்குளம் பகுதி யில் இரண்டு பேருக்கும், வேப்பங்குளம் பகுதியில் இரு வருக்கும், தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், கனக ராயன்குளம் பகுதியில் ஒருவருக் கும், பட்டக் காடு பகுதியில் ஐந்து பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது.

அத்துடன் நெடுங்கேணி பகுதியில் ஒருவருக்கும், சேமமடு பகுதியில் ஒருவருக்கும், வெளிக் குளம் பகுதி யில் ஒருவருக்கும், கற்பகபுரம் பகுதியில் இருவருக் கும், பதவியா பகுதியில் ஒருவருக் கும், புளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும், தோணிக்கல் பகுதி யில் நான்கு பேருக்கும், மகாமை லங்குளம் பகுதியில் ஒருவருக்கும், ஈரப் பெரியகுளம் பகுதியில் ஐந்து பேருக்கும், மகாகச்சகொடி பகுதி யில் இருவருக்கும், முதலியார் குளம் பகுதியில் ஒருவருக்கும், வீரபுரம் பகுதியில் மூன்று பேருக் கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, பெரியகுளம் பகுதியில் ஒருவருக்கும், உளுக் குளம் பகுதியில் இருவருக்கும், மெனிக்பாம் பகு தியில் ஒருவருக் கும், கந்தசாமி நகர் பகுதியில் இரண்டு பேருக்கும், பூவரசன் குளம் பகுதியில் ஒருவருக்கும், செக்கட்டிப்புலவு பகுதியில் ஒருவருக்கும், இராசேந்திரங் குளம் பகுதியில் ஒருவருக்கும், ஓலுமடு பகுதியில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (இ)

# கிளிநொச்சி சேவை சந்தை மூடப்படுகிறது

*கிளிநொச்சி, ஓக. 18*

கொரோனா பரவல் தீவிரம் பெற்று வருவதால் கிளிநொச்சி சேவை சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இதனால், இன்று முதல் சேவை சந்தைப் பகுதி மூடப் படும். இதேவேளை பொருத்த மான பொது இடங்களில் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று கரைச்சி பிரதேச சபை அறிவித் துள்ளது.

வியாபாரிகளும் மக்களும் சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றி நடந்து கொள்ளுமாறும் பிரதேச சபை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

**கல்வி tv CHANNEL-1**

**18.08.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

**கல்வி tv CHANNEL - 2**

**18.08.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
18.08.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆவணி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## ஏன் புதிய வெளிவிவகார அமைச்சர்?

இதுவரையில் கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் காமினி லக்ஷ் மன் பீரிஸ் புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒரு நியமனம்தான். பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், சட்டத் துறையில் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவர். சர்வதேச சட்ட வல்லுநர்கள் மத்தியில் நன்கு அறிமுகமுள்ளவர்.

1994இல், சந்திரிகா குமாரதுங்கவினால் அரசியலுக்குள் கொண்டு வரப்பட்ட ஜீ. எல். பீரிஸ், அப்போது நீதி மற்றும் அரசியல்சாசன அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். சந்திரிகா குமாரதுங்கவிற்கு நம்பிக்கைக்குரியவராக இருந்த பீரிஸ், 2001இல் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அர சாங்கம் ஆட்சியை கைப்பற்றியதைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்க வினால், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சின்போது, தலைமை பேச்சாளராக நியமிக்கப்பட்டார். 2005இல், மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியதை தொடர்ந்து, மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டார். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2015இல் இடம்பெற்ற தேர்தலில் தோல்வியடைந்த பீரிஸ், பின்னர் 2016இல் ராஜபக்ஷக்களின் புதிய கட்சியான பொதுஜன பெரமுனவின் தலைவராக அறிவிக்கப்பட்டார். பொதுஜன பெரமுன ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியதை தொடர்ந்து, பீரிஸ் தேசிய பட்டியல் மூலம் மீண்டும் அரசியலுக்குள் பிரவேசித்தார். பீரிஸ் பற்றிய குறிப்புகளிலிருந்து ஒரு விடயம் தெளிவாகும். பீரிஸ் தொடர்ந்தும் ராஜபக்ஷக்களின் முகாமிற்கு தேவைப்பட்டிருக்கின்றார்.

சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கான அமெரிக்க தூதுவரின் இல்லத்தில், ஜீ. எல். பீரிஸூம், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் சார்பில் அரசியல் தீர்வு விவகாரங்களை கையாளுபவருமான எம். ஏ. சுமந்திரன் ஆகியோருக்கிடையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இந்த சந்திப்பு இடம்பெற்றபோது, பீரிஸ் கல்வி அமைச்சர். தற்போது அவர் வெளிவிவகார அமைச்சர். பீரிஸ் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படு வது முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில்தான், குறித்த சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

பீரிஸ் அப்படி என்ன செய்துவிடுவார்? அரசியல் யாப்பு விவகாரங்களில் நிபுணரான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், கலாநிதி நீலன் திருச்செல்வத்துடன் இணைந்து தீர்வு பொதியை வரைந்தவர். அப்போது இந்த தீர்வுப் பொதி நீலன் - ஜீ.எல். பொதி என்றே அறியப்பட்டிருந்தது. பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் இடையில் இடம் பெற்ற பேச்சின் ஒவ்வொரு விடயங்களையும் ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து தயாரித்தவர். இந்த முயற்சிகளின்போது தற்போது இந்தியா விற்கான தூதுவராக இருக்கின்ற மிலிந்த மொறகொடவும் பீரிஸூடன் இணைந்து செயல்பட்டிருந்தார்.

2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, தமிழ் தேசியக் கூட்டமைப் பிற்கும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற சில சுற்று பேச்சுக்களும் பீரிஸ் தலைமையிலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த அடிப்படையில் நோக்கினால் அரசியல் பேச்சுகளில் நீண்ட அனுபவம் பீரிஸூக்கு இருக்கின்றது. ஆனால், சட்டத் துறையில் விற்பன்னராக இருந்த போதிலும்கூட, சர்வதேச விடயங்களை மிகவும் திறம்பட கையாளுவதில் இவரை திறமையானவராக பலரும் பார்ப்பதில்லை. இவர் வெளிவிவகார அமைச்சராக இருக்கின்றபோதே, ஜெனிவா விவகாரங்களை கையாளு வதற்காக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவையே மஹிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார்.

இப்போது எதற்காக மீண்டும் பீரிஸ் தேவைப்படுகின்றார்? அரசாங்கம் அரசியல் தீர்வு விடயத்தில் புதிதாக ஒரு முயற்சியை முன்னெடுக்க விரும்பு கின்றதா? அல்லது சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக் கூடிய முகம் பீரிஸூக்கு இருப்பதால் இவரைக் கொண்டு சில விடயங்களை முன்னெடுக்கலாம் என்று அரசு எண்ணுகின்றதா?

### ஆப்கானிஸ்தான் தலிபான்கள் வசம்:

# அமெரிக்கா, ரஷ்யா, சீனாவின் ‘பெரும் ஆட்டம்’

*காபூல் நகரத்தைக் கைப்பற்றி தலிபான்கள் ஆட்சிக்கு வந்ததும் அயல் நாடுகள் அனைத் தும் அடுத்து என்ன செய்வது என்ற யோசனை யில் ஆழ்ந்துள்ளன. ஆனால், சீனாவுக்கு எந்தக் குழப்பமும் இல்லை. தலிபான்களுடன் நட்புறவை விரும்புவதாக அந்த நாடு அறிவித் திருக்கிறது. இது இன்று எடுக்கப்பட்ட முடிவு அல்ல. ஒரு மாதத்துக்கு முன்பே தலி பான்களின் அரசியல் பிரிவு தலைவர் சீனா வுக்குச் சென்று அங்குள்ள தலைவர்களைச் சந்தித்து வந்தார்.*

*தனது அயல் நாட்டில் இருந்து மேற்குலக நாடுகளின் படைகள் திடீரென புறப்பட்டுச் சென்றிருப்பது ஒரு வகையில் சீனாவுக்கு மகிழ்ச்சியளிக்கவே செய்யும். ஆனால், அமெ ரிக்கா புறப்பட்டுச் சென்றுவிட்டதால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை நிரப்புவது குறித்து மிகுந்த எச்சரிக்கையுடனேயே சீனா செயல்பட்டு வருகிறது.*

*ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளைப் போல ஆப்கானிஸ்தானுக்கு சென்று சீனா ஒருபோதும் சண்டையிட்டதில்லை. ஆனால், சுமார் 70 கிலோ மீற்றர் நீளமான எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. மிகமிகக் குறைந்த நீளம் கொண்ட எல்லைதான் இது. ஆனாலும் இது சீனாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெ னில் இந்த பகுதி ஜின்ஜியாங் மாகாணத்தை ஒட்டிய எல்லையில் அமைந்திருக்கிறது. இது உய்குர் இஸ்லாமியர்கள் வசிக்கும் பகுதி.*

*ஏனென்றால் உள்நாட்டில் உய்கர் இஸ்லா மியர்கள் பிரச்னை எப்போதும் புகைந்து கொண்டே இருக்கிறது. அருகே தலிபான்கள் இருப்பது இதை மேலும் சிக்கலாக்கக்கூடும். சீனாவின் அரசு ஊடகங் கள் ஆப்கானிஸ்தான் பற்றிக் குறிப்பிடும் போது ‘வல்லரசுகளின் கல்லறை’ என்று கூறுகின்றன. அமெரிக்கா, சோவியத் ஒன்றி யம் ஆகிய நாடுகளைப் பின்பற்றி படுகுழியில் விழுந்துவிடக்கூடாது என்று சீனாவின் குளோபல் ரைம்ஸ் வெளியிட்ட தலையங்கம் கூறுகிறது.*

**ரஷ்யாவுக்கு ஏற்பட்ட ஆறாத வடு**

*1980களில் ஆப்கானிஸ்தானில் முஜாஹி தீன்களுடன் சண்டையிட்டு ஆறாத வடுக் களைப் பெற்ற அனுபவம் ரஷ்யாவுக்கு உண்டு. இன்று அமெரிக்காவுக்கு ஏற்பட்ட தைப் போன்றதொரு நிலைமை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் ஒன்றியத் துக்கும் ஏற்பட்டது. 1970களின் இறுதியில் ஆப்கானிஸ்தானில் சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கைத் தடுக்க அமெரிக்கா, சவுதி அரேபியா, துருக்கி, பிரிட்டன், சுவிற்சர் லாந்து ஆகிய நாடுகள் முஜாஹூதீன்களுக்கு ஆயுதங்களை கொடுத்தன.*

*ஆயுதங்களுடன் முஜாஹூதீன்களின் கெரில்லா போர் முறைக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் சோவியத் ஒன்றியப் படைகள் ஆப்கானிஸ்தானை விட்டே வெளியேறினர். இந்தப் போரால் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 50 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளா னார்கள்.*

*ரஷ்யாவில் இன்றைக்கும் தலிபான் இயக்கம் தடை செய்ப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இருக்கிறது. ஆனாலும் பழைய வடுக்களை எல்லாம் மறந்து இன்று ரஷ்யா தலிபான்களை ஆதரிக் கிறது.*

**அமெரிக்காவின் புதிய உத்தி**

*அமெரிக்கா திடீரென ஆப்கானிஸ்தானை கைவிட்டுச் சென்றது ஏற்றுக் கொள்ள முடி யாதது என்று பலரும் கவலை தெரிவிக்கின்ற னர். இது நம்பியவர்களுக்குச் செய்யும் துரோ கம் என்றுகூட விமர்சிக்கின்றனர். நான்கு அதிபர்கள் 20 ஆண்டுகளுக்கு பல லட்சம் கோடி ரூபாய் செலவு செய்து மீண்டும் தலிபான்களிடமே ஆட்சியைக் கொடுப்பதா என்றும் கேள்வி எழுப்புகின்றனார்.*

*ஆனால், இந்தக் கேள்விக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது உரையில் தெளிவான பதிலைக் கூறியிருக்கிறார். வேறு நாட்டைக் கட்டியெழுப்புவது அமெரிக்கா வின் வேலையில்லை என்று கூறியிருக்கும் அவர், அமெரிக்க மண்ணில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படக்கூடாது என்பதற்கா கத்தான் இந்தப் போர் நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.*

*அமெரிக்காவைப் பொறுத்தவரை ஆப்கானிஸ்தானில் இருந்து விலகிச் சென்றி ருக்கலாம். ஆனால், முழுமையாகக் கைவிட் டுச் செல்ல முடியாது என்கிறார் பிரிட்டிஷ் உளவு அமைப்பைச் சேர்ந்த றொபேர்ட் ஹன்னிகன். இந்த முக்கிய நாடுகளின் விருப்பங்களுக்கு இடையே சிக்கிய நாடு ஆப்கானிஸ்தான் என்பதை அதன் வரலாறு நமக்கு உணர்த்துகிறது என்கிறார் அவர்.*

*“இணைந்து பணியாற்றுவதற்குக் கடின மான ரஷ்யா மற்றும் சீனாவைப் போன்ற நாடுகளுடன் வர்த்தகம் செய்வதற்கு தன்னை தகவமைத்துக் கொள்ள வேண்டிய தருணம் அமெரிக்காவுக்கு வந்திருக்கிறது.” என்கிறார் ஹன்னிகன்.*

*“காலநிலை மாற்றம் மற்றும் ஆப்கானிஸ் தான் போன்ற அனைவருக்கும் முக்கியமான விவகாரங்களில் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வழியை கண்டுபிடிக்க வேண்டும் என்பதில் ஜோ பைடன் நிர்வாகம் தெளிவாக இருக்கிறது”*

*19-ஆம் நூற்றாண்டில் தங்களது செல் வாக்கை நிலை நிறுத்திக் கொள்வதற்காக பிரிட்டனும் ரஷ்யாவும் ஆப்கானிஸ்தானில் மோதிக் கொண்டன. அதை மகா ஆட்டம் என்று அழைத்தார்கள். அந்த ஆட்டம் இன் றும் நீடித்திருக்கும் ஒரு விளையாட்டுதான். ஆட்டக்காரர்கள் அதிகரித்திருக்கிறார்கள். மேற்குலக நாடுகளுக்கு சோர்வு ஏற்பட்டிருக்க லாம். ஆனால் ஆப்கானிஸ்தான் இன்றைக்கும் முக்கியமானதுதான்.*

•

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சகிப்புத் தன்மை தேவை. தடைகள் தாண்டி முன்னேறுவீர்கள். யாரைப் பற்றியும் யாரிடமும் கேலி பேசி சிரமத்துக்குள்ளாக வேண்டாம். கடினமாக உழைத்துப் பிரச்னைக்குத் தீர்வு காண்பீர்கள்.

**இடபம்**
முயற்சியில் இருந்த தடை நீங்கும். நிதானமான வெற்றி உண்டு. உங்களை வெறுத்தவர் வலிய வந்து உங்களின் உதவியை பெறுவார். வெளியூரிலிருந்து நற்செய்தி வரும்.

**மிதுனம்**
பிரிந்தவர் ஒன்றுசேர வாய்ப்புண்டு. உங்களின் செயல்திறன் கூடும். பிரிந்த குடும்பத்தை ஒன்று சேர்க்க முயற்சி செய்வீர்கள். உங்களுக்கு வர வேண்டிய புகழும், பாராட்டும் தாமதமாகக்கூடும்.

**கடகம்**
சிறு பிரச்னைகள் பெரியவர்களின் தலையீட்டால் தீரும். அதிகமாக உழைப்பீர்கள். முன்னேற்றத்திற்கான புதுப்பாதை தெரியும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கி அமைதி திரும்பும்.

**சிம்மம்**
தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கக்கூடும். பணியாளர்கள் நிதிப் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காண்பீர்கள். முயற்சிகளுக்கு முழுமையான பலன் எதிர்பார்க்காதீர்கள்.

**கன்னி**
மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட சிரமங்கள் நீங்கும். வெளிநாட்டில் வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு நன்மை உண்டாகும். மகிழ்வான நாள். எதிலும் சற்று விலகி நிற்பது நல்லது.

**துலாம்**
தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. பண வரவு சற்று தாமதமாகும். வாகனம் வாங்கும் எண்ணம் வரும். புண்ணியச் செயல்களில் ஈடுபடுவதால் மன நிம்மதி மீளும்.

**விருட்சிகம்**
நண்பர்களால் சங்கடமும் பிறகு நன்மையும் உண்டாகும். பெரிய விஷயங்களை நன்கு யோசித்து முடிவு எடுங்கள். சொத்துக்கள் வாங்குவீர்கள். கடன் தொல்லை பற்றி பயம் வேண்டாம்.

**தனுசு**
எதையும் நிதானித்து செய்தால் நன்மை அடைவீர்கள். பயம் விலகும். குடும்ப வாழ்க்கை இனிமையாக மாறும். தன்னம்பிக்கை குறையாமல் இருந்தால் சாதனை நிகழும்.

**மகரம்**
மற்றவர்களால் விமர்சிக்கப்பட்டால் கவலை வேண்டாம். இளைய சகோதர, சகோதரிகள் மூலம் உதவி கிடைக்கும். பெரியோரின் தலையீடு சிரமத்திலிருந்து விடுபட வழிகாட்டும்.

**கும்பம்**
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். ஆரோக்கியத்தில் சிறிய தொல்லை ஏற்பட்டு இன்றே குணமாகும். பணியாளர்கள் அதிக கவனத்துடன் செயல்படுவது நல்லது.

**மீனம்**
உங்களது நல்ல செயலை பிறர் விமர்சித்தால் கண்டு கொள்ளாதீர்கள். குழந்தைகளின் சிரமங்களை தீர்ப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்கால நன்மை குறித்துச் செய்திருந்த முயற்சி பலனளிக்கும்.

# அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் திட்டத்தை சீர்குலைக்க அவதூறு பரப்பல்

## முதலமைச்சர் மு.க ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, ஒக. 18

"அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆவது குறித்த திட்டத்தை வேண்டுமென்றே கொச்சைப்படுத்தி, அரசியலுக்காகவோ அல்லது சமூக நீதியைப் பாழடிக்க வேண்டுமென்ற நோக்கத்திலோ சிலர் திட்டமிட்டுச் செய்து கொண்டிருப்பதாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழக முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் இது தொடர்பாக சட்டப்பேரவையில் நேற்று கருத்து வெளியிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

"அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆவது குறித்து அறநிலையத்துறை அமைச்சர், ஒரு விளக்கத்தை இங்கே தெளிவாகச் சொல்லியிருக்கிறார் கள். அதுகுறித்து நான் அதிகம் பேசவிரும்பவில்லை. ஆனால், ஒன்றை மட்டும் உறுதியோடு சொல்கிறேன். நம்மை ஆளாக்கிய நம்முடைய ஈரோட்டுச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருடைய நெஞ்சிலே தைத்த முள் இது.



அந்த முள்ளை எடுத்திட வேண்டுமென்பதற்காக முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதி, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தார். ஆனால், அது நடைமுறைக்கு வரமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், இப்போது அதனை நாம் நடை முறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் அதற்கான பணி ஆணை களை வழங்கியிருக்கிறோம்.

வேண்டுமென்றே அதைக் கொச்சைப்படுத்தி, அரசியலுக்காகவோ அல்லது சமூக நீதியைப் பாழடிக்க வேண்டுமென்ற நோக்கத்திலோ சிலர் திட்டமிட்டுச் செய்து கொண்டிருப்பதை மக்கள் நன்றாக அறிவார்கள்" என்றார்.

# ஸ்டாலினுக்கு அதிகாரம் கொடுத்தது யார்? உச்ச நீதிமன்றம் வரையில் செல்வேன்!

## அர்ச்சகர் விவகாரத்தில் சுப்பிரமணியன் சுவாமி சீற்றம்



சென்னை, ஒக. 18

"அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற தமிழக அரசின்முடிவு தவறானது. இதற்கு எதிராக உச்ச நீதிமன்றம் வரை செல்வேன்" என எச்சரித்துள்ள பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி, "முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு யார் இதற்கான அதிகாரத்தைக் கொடுத்தது? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்ற, சட்டத்தின்வாயிலாக 29 ஓதுவார்கள் உள்பட 58 பேருக்கு பணி நியமன ஆணைகளை ஸ்டாலின் வழங்கினார். இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப் போவதாகவும், தேவைபட்டால் உச்ச நீதிமன்றம் வரை செல்வேன் எனவும் சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார்.

"அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்ற சட்ட மசோதா, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியால் 51 ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டது. எனினும், வழக்குகள் காரணமாக அதை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. அது தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அரசின் இந்த நடவடிக்கைக்கு பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

# காலியாக உள்ள ராஜ்யசபா உறுப்பினர் பதவிக்கான தேர்தல் திகதி அறிவிப்பு

சென்னை, ஒக. 18

தமிழகத்தில் மூன்று ராஜ்யசபா இடங்கள் காலியாக உள்ள நிலையில், ஓர் இடத்தில் செப்டம்பர் 13-ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் மூன்று ராஜ்ய சபா இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கும் நிலையில், ஓர் இடத்துக்கான ராஜ்யசபா தேர்தல் செப்ரெம்பர் 13-ஆம் திகதி நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அ.தி.மு.கவின் முகமது ஜானின் மறைவை தொடர்ந்து அந்த இடத்துக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 13ஆம் திகதி வாக்குப்பதிவு, வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வேட்பு மனு துவக்கம் - ஒகஸ்ட் 24. வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் -ஒகஸ்ட் 31. தேர்தல் நடைபெறும் நாள் செப்ரெம்பர் 13 (காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை)

# சிவசங்கர் பாபாவுக்கு பிணை மறுப்பு

சென்னை, ஒக. 18

பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்த வழக்கில் சிவசங்கர் பாபாவுக்கு பிணை வழங்க சென்னை உயர் நீதிமன்றம் நேற்று மறுப்பு தெரிவித்துளது.

சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளி நிறுவுநர் சிவசங்கர் பாபா மீது அப்பள்ளி முன்னாள் மாணவிகள் சமூக வலைதளத்தில் பாலியல் புகார் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்ததாக வந்த புகாரில் கேளம்பாக்கம் பொலிஸார் சிவசங்கர் பாபா மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த நிலையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிவசங்கர் பாபா தனக்கு பிணை வழங்கக் கோரி



சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இருந்தார். இந்த மனு மீது நேற்று தீர்ப்பளித்த நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

# கஜேந்திரகுமாருக்கு கொரோனா!

## மனைவி மற்றும் மகளுக்கும் தொற்றுறுதி

கொழும்பு, ஓக. 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவருடைய மனைவி, மகள் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் குறித்த தகவலை பகிர்ந்துள்ளார்.

மனைவி, மகள் மற்றும் தனக்கு கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து பரிசோதனைக்கு உட்படுத்திய தாகவும், குறித்த பரிசோதனை முடிவுகள் நேற்று கிடைத்துள்ள தன் அடிப்படையில் மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தம்முடன் கடந்த நாட்களில் தொடர்புபட்டவர்கள் தனிமைப்படுத்திக்கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் கொரோனாவால் 2 பெண்கள் உட்பட 3பேர் மரணம்

## கணவனை தொடர்ந்து மனைவியும் பலி

வவுனியா, ஓக். 18

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த இரண்டு பெண்கள் உட்பட மூவர் கோவிட் தொற்று நோயால் நேற்று முன்தினம் மரணமடைந்தனர்.

இந்த மூவரும் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு மரணமடைந்தனர். இந்த மூவரும் 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பெண்களில் ஒருவர் சுந்தரபுரம் பகுதியில் கொரோனா தொற்றிற்கிலக்காகி உயிரிழந்த முதியவரின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# நாமலின் புதிய அமைச்சின் கீழ் வரும் விடயதானங்கள்

கொழும்பு, ஓக. 18

அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சகத்தை நிறுவ அதி விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, திட்ட மேலாண்மை மற்றும் கண்காணிப்பு துறை புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக நாமல் ராஜபக்ஷ நேற்று முன் தினம் நியமிக்கப்பட்டார்.

பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு, தேசிய பட்ஜெட், அரச முதலீடுகள் மற்றும் தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக கொள்கைகள் வகுத்தல் ஆகியவற்றுடன் கொள்கைகளை வகுக்கும் பணியுடன் திட்ட மேலாண்மை மற்றும் கண்காணிப்பு துறையும் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(அ)



# மருந்து தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## விரைந்து பணியாற்ற ரணில் ஜனாதிபதிக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 18

**இலங்கையில் வைத்தியசாலைகளில் இடநெருக்கடியும் ஏற்பட்டுள்ள நிலையில், அடுத்த சில நாட்களில் மருந்து தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இதனால் எதிர்வரும் நாட்களில் கோவிட் மரணங்கள் வெகுவாக அதிகரிக்கும் என்றும் இதனைத் தடுத்து நிறுத்த உடனடியாக செயற்பட வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று காலை சந்தித்து பேசியபோது இதனைத் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் கோரிக்கைக்கமைய இந்த சந்திப்பு நேற்று முற்பகல் 11 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கொவிட் நெருக்கடியை சமாளிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு முன்வைத்த யோசனையை ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்.

அத்துடன், பாராளுமன்ற கட்சித் தலைவர்கள், சபாநாயகர், பிரதமர், சுகாதார அதிகாரிகள் ஆகியோரை இணைத்து ஒருங்கிணைந்த படையணியொன்றை உருவாக்கி, இது குறித்து தீவிரமாக செயற்பட வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியிடம் யோசனை முன்வைத்துள்ளார்.

இதற்கு எவ்வித பதிலையும் ஜனாதிபதி வழங்காத போதிலும், சாதகமான சமிக்ஞைகள் கிடைத்ததாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பருத்தித்துறையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கரவெட்டி மேற்கு, இராஜகிராமத்தைச் சேர்ந்த பைரவன் நாகரத்தினம் (வயது-78) என்பவராவார்.

சுப்பர்மடம் பகுதியில் உள்ள மீனவ வாடிக்கு அருகாமையில் சடலம் காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வவுனியா - ஓமந்தை பகுதியில் மயங்கி வீழ்ந்து ஒருவர் மரணம்

வவுனியா, ஓக. 18

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த நபரொருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்த நிலையில் கொரோனா தொற்று பரிசோதனைக்காக சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஜே.சி.பி வாகனத்தின் உதவியாளராக கடமையாற்றிய குறித்த நபர் ஓமந்தைப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில் முற்பகல் 10 மணியளவில் திடீரென மயங்கி கீழே வீழ்ந்துள்ளார்.

இந்நிலையில் அங்கிருந்தவர்களின் உதவியுடன் ஓமந்தை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போதிலும் அவர் முன்னரே மரணமடைந்தாரென மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர்.

தெற்கிலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபரே இவ்வாறு மரணமடைந்தவராவார்

உயிரிழந்த நபரின் சடலம் பி.சீ.ஆர் பரிசோதனைகளுக்காக ஓமந்தை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து கொரோனா நோயாளி தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா தொற்றாளர் ஒருவர் நேற்றுக் காலை தப்பியோடியுள்ளார்.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவரே தப்பியோடினார்.

அவர் கடந்த ஒரு வாரமாக சிகிச்சை பெற்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# டெல்டா 3 வகை பிறழ்வுகள் இலங்கையில் அடையாளம்!

கொழும்பு, ஓக. 18

இலங்கையில் எஸ்.ஏ. 222வி, எஸ்.ஏ 701எஸ் மற்றும் எஸ்.ஏ 107 8எஸ் என்ற 3 வகை டெல்டா பிறழ்வு வைரஸ்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை ராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, வேகமாகப் பரவும் ஒரு திரிபு வைரஸ் நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் போது அது பிறழ்வடைவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம். எனவே, டெல்டா மாறுபாட்டின் உள்ளூர் புதிய



பிறழ்வுகளை நாம் எதிர்பார்க்க வேண்டும் என ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் பிரிவு பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர முன்னதாகவே எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனா பற்றிய புள்ளிவிவரம் குளறுபடியில் இராணுவ அதிகாரி

## சபையில் எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 18

கொரோனா வைரஸால் ஏற்படும் இறப்புகள் மற்றும் பாதிப்புக்களின் எண்ணிக்கைக்குப் பின்னால் ஓர் இராணுவ அதிகாரி இருக்கின்றனரென எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இந்த விடயத்துக்கு பின்னால் மேஜர் ஜெனரல் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் தெரிவித்தார்.

குறித்த நபரே கொரோனா வைரஸால் இறந்த அல்லது பாதிக்கப்பட்ட நபர்களின் உண்மையான எண்ணிக்கைக்கு மாறாக குறைந்த எண்ணிக்கைகளை வழங்கியதாக அவர் குற்றம் சுமத்தினார்.

கொரோனா மூலம் இறந்த அல்லது பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுக்கு இதுவே காரணம் என்று அவர் கூறினார்.

இந்த விவகாரத்தை விசாரிக்க வேண்டும் என அவர் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்தார்.

உண்மையான புள்ளிவிவரங்களை வழங்குவது இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுநோயை சமாளிக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கலந்துரையாடல் ஊடாக ஆசிரியர்கள் பிரச்னையை தீர்ப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக. 18

ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கையை கலந்துரையாடல் ஊடாக தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக புதிய கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி அமைச்சர் நேற்றுமுன் தினம் பிற்பகல் வண. எல்லே குணவன்ஸ தேரரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

குறித்த கலந்துரையாடலுக்கு பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், "கல்வி அமைச்சு போன்று ஒவ்வொரு அமைச்சின் பணியும் கடினமானதாகவும். சகோதர அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியுடன் இணைந்து இந்த சவாலையும் தேசியப் பணியையும் நிறைவேற்ற நாங்கள் அர்ப்பணிப்புடன் செயல்படவுள்ளோம். நமது பிள்ளைகள்தான் இந்நாட்டு எதிர்காலம். அதை ஆழமாக புரிந்து



கொண்டு செயல்பட நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம். கலந்துரையாடல்கள் மூலம் ஆசிரியர் பிரச்சனையை நாங்கள் கையாள்வோம்-என்றார்.

# கர்ப்பவதி தாய்மார்களுக்கு தனி தடுப்பூசி மையம் தேவை

கொழும்பு, ஒக. 18

கர்ப்பவதி தாய்மார்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்காக தனிப்பட்ட தடுப்பூசி செலுத்தல் மையத்தை ஆரம்பிக்க வேண்டும் என குடும்பநல சுகாதார சேவை சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தற்போது முன்னெடுக்கப்படும் தடுப்பூசி மையங்களுக்கு கர்ப்பவதி தாய்மார்கள் செல்வதனால், அவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படக்கூடும் என்று அந்த சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி செலுத்தல் மையங்களுக்கு செல்லும் பொதுமக்கள் மத்தியில், டெல்டா திரிபு தொற்றுடையவர்கள் இருக்கக்கூடும்.

எனவே, கர்ப்பவதி தாய்மார்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி செலுத்துவதற்காக வாரத்துக்கு ஒரு முறையேனும் அல்லது சில மணித்தியாலங்கள் ஒதுக்கியேனும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ அல்லது பிரதேச வைத்தியசாலையிலோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அவர் குறிப்பிட்டார்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தைமீறி பேய் விரட்டிய 10 பேர் சிக்கினர்!

கொழும்பு, ஒக. 18

தனிமைப்படுத்தல் சட்டத்தைமீறி பேய் விரட்டும் சடங்கை நடத்திய சாமியார் உட்பட 10 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை - மாயாதுன்னை பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதானவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளபோதிலும் 14 நாட்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னர் இவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படவுள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஒரு மாதத்துக்கு பொது முடக்கம்!

## வார இறுதியில் அறிவிப்பு வெளியாகலாம்

கொழும்பு, ஒக.18

**கொரோனா மற்றும் டெல்டா வைரஸ் பரவலின் தீவிரம் காரணமாக ஏற்கனவே இரவுநேர ஊரடங்கு மற்றும் கடும் சுகாதார பாதுகாப்புச் செயல்பாடுகளை முன்னெடுத்துள்ள அரசு, அடுத்தகட்ட நகர்வாக நாட்டை முடக்குவதற்கு ஆலோசித்து வருகிறது.**

வார இறுதியில் இந்த முடக்கம் அமுலுக்கு வரலாமெனவும், இடைவேளை சகிதமான இந்த முடக்கம் சுமார் ஒரு மாத காலம் வரை நீடிக்குமெனவும் சுகா தாரத் துறையின் உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமுடக்கம் கடுமையாக கடைப்பிடிக்கப்படும் அதேசமயம் அத்தியாவசிய சேவைகளை மட்டும் இயக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பொதுமுடக்கம் குறித்தான அரசின் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.



# கிரிபத்கொடையில் தீ விபத்து; ஐந்து பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக. 18

கிரிபத்கொடையில் மூன்று மாடி கட்டடத்தின் தரைத் தளத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் மூச்சுத்திணறல் ஏற்பட்ட 5 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் வணிக வளாகத்தின் தரைத் தளத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

விபத்தின் போது கட்டடத்துக்குள் குழந்தைகள் உள்ளிட்ட 12 பேர் சிக்கியிருந்தனர்.

பொலிஸார் மற்றும் அப்பகுதி மக்களால் அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாநகர சபைகளின் தீயணைப்பு சேவை பிரிவுகளின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. கிரிபத்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் மேலும் 8 பொருள்களுக்கு தடை!

கொழும்பு, ஒக. 18

சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் மேலும் எட்டு பொருட்கள் எதிர்காலத்தில் தடை செய்யப்படும் என சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பசுமை சமூகப் பொருளாதாரத்திற்கான ஜனாதிபதி செயலணியின் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக பொலிதீன் மற்றும் பிளாஸ்ரிக் தடை அமல்படுத்தப்பட்டது.

ஷிற்சட் பக்கெட்டுகள் உட்பட ஐந்து தயாரிப்புகள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், சந்தையில் இருந்து முறையாக அகற்றப்பட்டு வருவதாகவும் மேலும் எட்டு தயாரிப்புகளும் எதிர்காலத்தில் தடை செய்யப்படும் என்றும் அமைச்சர் அமரவீர கூறினார்.

லஞ்ச் சீற் தடை தொடர்பான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் ஷொப்பிங் பாக்குகளின் பயன்பாடும் குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# மருதமடு அரச காணி தனிநபரால் அத்துமீறி கையகப்படுத்தும் முயற்சி தடுத்து நிறுத்தம்!

மன்னார், ஒக. 18

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மருதமடு கிராமத்திற்கு சொந்தமான 14.5 ஏக்கர் அரச காணியை அபகரிக்க மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வேறு கிராமத்தவர் அனுமதிப்பத்திரங்கள் இன்றி அடாத்தாக அபகரிக்க முற்பட்டு புனரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த வேளை அந்தக் கிராம மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமையை நேரடியாக அவதானித்தார். இவ் விடயம் தொடர்பாக முசலி பிரதேச செயலாளருடன் கலந்துரையாடினார்.

முசலி பிரதேச காணி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தரும் அந்த இடத்துக்கு வருகை தந்து இந்தக் காணி அரச காணியாக எல்லைப்படுத்தப்பட்ட காணி என்பதை உறுதி செய்தனர்.

இந்தக் காணி அடாத்தாக பிடிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருவதாக அரச அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினருக்கு தெரியப்படுத்தினர்.

அது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட்டு மருதமடு கிராமத்தில் காணியற்ற மக்களுக்கு உடனடியாக இக் காணிகளை பிரித்து வழங்கும்படி முசலி பிரதேச செயலாளருக்கு பாராளுமன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹா நகரத்துக்குள் பிரவேசிக்கவேண்டாம்!

## கம்பஹா நகர மேயர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 18

கொரோனா தொற்றின் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதால், கம்பஹா நகரத்துக்கு அத்தியாசிய காரணத்தைத் தவிர எவரும் பிரவேசிக்க வேண்டாம் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

கம்பஹா நகர மேயர் ஏரங்க சேனாநாயக்க இந்த அறிவிப்பை நேற்று வெளியிட் டுள்ளார்.

முன்னதாக கொழும்பு மாநகர சபை மேயர் ரோஸி



சேனாநாயக்க, டெல்டா தொற்றின் உயரிய அச்சுறுத்தல் இருப்பதால் கொழும்பு நோக்கி வருவோருக்கு எச்சரிக்கையை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 7 ரயில் நிலையங்கள் மூடல்

கொழும்பு, ஒக. 18

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக 07 ரயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்துருவ, ரத்கம, வில்வத்த, தல்பே, ஹெட்டிமுல்ல, எகொடஉயன மற்றும் வடக்கு களுத்துறை ரயில் நிலையங்களே மூடப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது, ரயில் சேவை துணைத் துறையின் கீழ் உள்ள ஊழியர்களில் 102 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இவ்வாறு தொற்றுக்கு உள்ளானவர்களில் 38 பேர் புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள், 12 கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் 52 ஊழியர்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அத்தியாவசிய சேவை அல்லாத கடைகள் திருகோணமலையில் நேற்று முதல் பூட்டு

திருமலை, ஒக. 18

திருகோணமலையில் நேற்று முதல் அத்தியாவசிய சேவைகள் அல்லாத கடைகள் மற்றும் வியாபார நிலையங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகரசபை தலைவர் நா.ராஜநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக் கையில்-

திருகோணமலையில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையினால் நேற்று முதல் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து வியாபார நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனாலும் மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அவர்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள சிறு கடைகள் திறக்கப்பட்டிருக்கும்.

மேலும் நடமாடும் சேவைகள் ஊடாக மீன் மற்றும் மரக்கறி வகைகளை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது-என்றார்.

## கொரோனா உயிரிழப்பை விட

# தொற்றாநோய்களால் ஏற்படும் இறப்பு அதிகரிக்கும் வாய்ப்பு!

## யாழ். மருத்துவர் அரவிந்தன் தகவல்

**யாழ்ப்பாணம், ஒக.18**

**கொரோனா நோயினால் ஏற்படும் இறப்பினை விட தற்போதுள்ள சூழ்நிலையில் தொற்றா நோயினால் ஏற்படும் இறப்பின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக மருத்துவர் அரவிந்தன் தெரிவித்தார்**



அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.போதனா வைத்தியசாலை கிளையின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே வைத்தியர் அரவிந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொற்றா நோய் உள்ளவர்கள் நோய் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். தங்கள் நோய்களுக்கான சிகிச்சைகள் அனைத்து வைத்தியசாலைகளிலும் வழங்கப்படுகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வர முடியாவிட்டால் அருகிலுள்ள சிகிச்சை நிலையங்களுக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். தற்போதுள்ள சூழ்நிலையில் சிலர் வைத்தியசாலைகளுக்கு சென்றால் தமக்கு தொற்று ஏற்படும் என வைத்தியசாலை கிளினிக், சிகிச்சைகளுக்கு செல்லாது தவிர்க்கின்றார்கள்.

கொரோனா நோயினால் ஏற்படும் இறப்பினை விட தற்போதுள்ள சூழ்நிலையில் தொற்றா நோயினால் ஏற்படும் இறப்பின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு கூடுதலாக உள்ளது.தொற்றா நோய் உடையவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படுமாக இருந்தால் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

அதேபோல் தொற்றுநோயாகிய கொரோனாவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதேபோல் தொற்றா நோய் தொடர்பிலும் அதிக அக்கறை செலுத்த வேண்டும். எனவே தற்போதுள்ள சூழ்நிலையில் தொற்று நோய் உள்ளவர்கள் மிகவும் அவதானமாக தமக்குரிய நோய் சிகிச்சையை செயற்படுத்தவேண்டும்-என்றார். (அ-03)



# நல்லூர் பயண தடைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடிவு

யாழ்ப்பாணம், ஒக. 18

நல்லூர் திருவிழாவினை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத்தடைகளில் மாற்றத்தை ஏற்படுத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான விசேட ஊடக அறிவிப்பு விரைவில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்களின் வேண்டுகோளை அடுத்து ஆலயத்தை சூழவுள்ள வீதித்தடைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து, யாழ்.மாநகர சபை முதல்வர் மணிவண்ணன், யாழ்ப்பாண பொலிஸாருடன் நேரடியாக களத்துக்குச் சென்று கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அதாவது விசேட திருவிழாக்கள் மற்றும் பூசை நேரங்களை தவிர மிகுதி நேரங்களில் வீதிக் கட்டுப்பாடுகளில் தளர்வை ஏற்படுத்தவும் பொது மக்களை ஆலயச் சூழலில் உள்ள கடைகளுக்கு செல்லும் வகையில் அனுமதிக்கவும் இணக்கம் காணப்பட்டது.



# கே.கே.எஸ் வீதியில் கடை ஒன்றில் தீ !

யாழ்ப்பாணம், ஒக. 18

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை பிரதான வீதியில் தண்ணீர் சுத்திகரிப்பு தொழில்நுட்ப வியாபார நிலையத்தில் ஏற்பட்ட மின் கசிவின் காரணமாக தீ பரவல் ஏற்பட்டு அங்கு இருந்த இலத்திரனியல் உபகரணங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகி உள்ளன.

யாழ்ப்பாண மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு அவ்விடத்துக்கு விரைந்து வேகமாக செய்யப்பட்டதன் காரணமாக பாரிய தீ விபத்து தடுக்கப்பட்டது. (அ-03)

# புறக்கோட்டையிலும் கடைகளுக்கு பூட்டு

கொழும்பு, ஒக. 18

கொழும்பு-புறக்கோட்டை கெய்சர் வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களை 10 நாள்களுக்கு மூடுவதற்கு கெய்சர் வீதி வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது டெல்டா வைரஸ் திரிபு வேகமாக பரவிவரும் நிலையில், நிறுவன உரிமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை இவ்வாறு மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் உள்ள 31 நகரங்களில் இவ்வாறு வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தற்போது புறக்கோட்டையிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீட்டில் இருக்கும்போதும் முகக்கவசம் கட்டாயமானது

கொழும்பு, ஒக. 18

டெல்டா வைரஸ் மிக வேகமாக பரவி வருவதனால் வீட்டினுள்ளும் முகக் கவசம் அணிவதை கட்டாயப்படுத்தி கொள்ளுமாறு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

வீட்டில் ஒருவர் கழிவறை மற்றும் குளியலறையைப் பயன்படுத்தி 15 நிமிடங்களுக்குப் பின்பு இன்னொருவர் பயன்படுத்தினால், மற்றொரு நபருக்கு வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்பில்லை என்றும் மருத்துவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், வைரஸ் தொற்றானது 15 வினாடிகளுக்குள் இன்னொருவருக்கு பரவக்கூடியது. எனவே ஒரு குறுகிய நேரத்திற்காவது முகக் கவசத்தை அகற்றுவது, வைரஸ் தொற்றுக்கு வழிவகுக்கும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது இந்தியா மற்றும் அமெரிக்காவில் சிறுவர்களுக்கு இடையே டெல்டா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. எனவே உங்கள் குழந்தைகளை வீட்டுக்குள்ளேயே வைத்துக்கொள்ளவும், வெளியாட்களை வீட்டுக்குள் நுழைய அனுமதிக்காதீர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# உயர் கல்வியில் ‘தரம்’

கௌஷல்யா பெரேரா

**பொதுமக்கள் மத்தியிலான கலந்துரையாடல்களும் அவற்றின் எளிமையான வேலைக்காகக் கல்வி என்ற கருத்தை விடுத்து ‘கற்றறிந்தவர்’ என்றால் யார் என்பது பற்றியும் அவ்வாறான ஒரு நபரை உருவாக்கப் பல்கலைக்கழகங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது நோக்கியும் திரும்ப வேண்டும்.**

எமது பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகள் மீதான பிரதான முறைப்பாடு அவர்களின் “வேலைக்கமர்த்த முடியாத தன்மை” ஆகவுள்ளது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களும் உலக வங்கியும் வேலையின்மையைக் குறைந்த ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்பப் புலமைக்குச் சமானப்படுத்தியுள்ளன. இவ்வாறான பலவீனங்களுக்கான காரணம் கல்வி மீதான அரச முதலீட்டின் பற்றாக்குறை எனப் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். எமது அரசாங்கமோ “வேலைக்கமர்த்தக் கூடிய “ஒரு பட்டதாரி அரச நிதியாலன்றி 2003 இலிருந்து உலக வங்கி மூலம் பெறப்படும் சுமார் 180 மில்லியன் USD பெறுமதியான கடன் மூலமே உருவாக்கப்பட வேண்டும் எனக் கருதுகிறது.

படித்த ஓர் இளம் நபரை வேலைக்கமர்த்த முடியாதிருப்பது ஏன்? வேலை ஒன்றைப் பெறுவதற்கான போதிய அறிவோ திறன்களோ அவரிடம் இல்லாதிருக்கலாம். எனினும் ஒருவரை வேலைக்கமர்த்த முன் அதற்கான வேலைவாய்ப்புக்கள் இருக்க வேண்டுமல்லவா? இவ் வேலை வாய்ப்புக்களோ எமது நாட்டில் பற்றாக்குறையாகவுள்ளன. அரசாங்கங்கள் இதற்குத் தீர்வாகப் பெருவாரியான இளைஞர்களை அரச துறைக்குள் உள்வாங்கிக் கொண்டு, பல்கலைக்கழகங்களை மாறுமாறு உத்தரவிடுகின்றன. வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில் ஒரு தரிசு நிலமாகவே எமது நாடு காணப்படுவதன் விளைவாக வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள மக்கள் தகுதியையன்றி உறவினர்கள், நண்பர்கள் போன்ற தொடர்புகளால் கிடைக்கும் சலுகைகளை நாடுகிறார்கள்.

**தரத்தை அளவிடுதல்**

1978 இன் பல்கலைக்கழகங்கள் சட்ட இல.16 இற்கேற்ப பல்கலைக்கழகங்களை ஆராய்வதற்கும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு (UGC) சகல அதிகாரமும் உண்டு (பகுதி 3). இருப்பினும் 2003 இல் “இளங்கலைப் பட்டப் படிப்பின் தரத்தையும் பொருந்துமையையும் மேம்படுத்தல்” என்ற தலைப்பில் உலக வங்கியின் பல்கலைக்கழகங்களுக்கான முதலாவது கடன் தொடர் வரிசையானது புதிய தர உறுதிப்படுத்தல் நடைமுறையொன்றை முன்வைத்தது.

இந்த நடைமுறையானது எமது பட்டதாரி களின் முதலாளிமாருக்கான கவர்ச்சித்தன் மையை அதிகரிப்பதன் மூலம் அவர் களது தரத்தை மேம்படுத்த உறுதியளித் தது.

இப் புதிய நடைமுறை “இலங்கை தகுதிகள் கட்டமைப்பின்” ஊடாக உயர் கல்வியைத் தரப்படுத்த முனைகின்றது. பட்டப்படிப்புகள் மற்றும் டிப்ளோமாக்கள் போன்ற கற்கை நெறிகளுக்கான அதிகுறைந்த தகைமைகள் மற்றும் ஏனைய தேவைகளை இக்கட்டமைப்பு முன்வைக்கின்றது. இந்தக் கட்டமைப்பு பிரித்தானிய முறையை ஒத்ததாகும். இங்கு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் ஐக்கிய இராச்சியத்திலும் பட்டதாரிகளின் வேலைக்கமர்த்தக் கூடிய தன்மை தொடர்பாக எமது நாட்டை ஒத்தவாதங்கள் இடம்பெறுவதுடன் அவர்களது தர உறுதிப்படுத்தல் கட்டமைப்பானது அதற்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கல்வி நிறுவனங்களையும் கற்கை நெறிகளையும் “சிறந்த நடைமுறைகள்” மற்றும் “தர நிலைகளோடு” அவ்வப் போது மதிப்பாய்விடுவதன் மூலம் தரமானது பேணப்படும்.

உயர்கல்வியின் தரத்தை மதிப்பிடுவது இன்றியமையாததாக இருப்பினும் அதனை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு எளிதான விடயமல்ல. உதாரணமாக வாழ்க்கைக்கான தொலைநோக்கு, தர்க்கரீதியான சிந்தனை, சிக்கல்களைத் தீர்க்கும் தன்மை போன்றவற்றின் அடிப்படையில் ஒரு நான்கு வருடப் பட்டப் படிப்பை எவ்வாறு மதிப்பிடுவது? மதிப்பிடலுக்காக அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஒரே விதமான அளவு கோல்கள் பொருந்துமா? என்ற கேள்விகள் எழுகின்றன.

உயர்கல்வியின் தரத்தை அளவைக்குட்படுத்த முனைகின்றமை அதனை ஒருங்கே பெருநிறுவனமயமாக்குவதோடு இவ்வாறான நெருக்கடி இலங்கைக்கு மட்டும் தனித்துவமாக இருந்துவிடவில்லை. பல்கலைக்கழ கங்கள் வியாபாரக் கம்பனிகள் போல் பெருநிறுவனத் திட்டங்கள், வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள், நிறுவன மதிப்பாய்வுகள், தணிக்கைக்கான இடம் மற்றும் நிதி போன்றவற் றைப் பேணுமாறு எதிர்பார்க்கப் படுகின்றன. இவ்வாறான பொதுவான அளவுகோல்களைக் கொண்டு அறிவுசார் மேம் பாட்டை அளவிட முனைவது இலகுவானதல்ல.

அளவைகளை அடிப்படையாகக் கொண்ட, தணிக்கை முறைசார் அளவுகோல்களைக் கல்வியின் மீது பயன்படுத்து வதன் சிக்கல்கள் பற்றி உலகம் பூராகவும் பல நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். சமூகத்தில் பொறுப்பான தனி நபர்களை யும் அக்கறையுடைய, அரசியல் ரீதியில் ஈடுபாடுடைய மக்களையும் உருவாக்குவதில் உயர் கல்வியின் பங்களிப்பைப் புறக்கணிப்பதன் பாரதூரமான பின்விளைவுகளை அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இதற்கெதிரான முக்கிய சாட்சி 2020 இன் “ஐக்கிய இராச்சியத்தின் உயர் கல்விக்கான சிரேஷ்ட மேலாண்மை மதிப்பாய்வு: மேலாளர் நிர்வாகத்துக்கெதிரான புள்ளி விபரவியல் மறுமொழி” என்ற வெளியீட்டில் முன்வைக்கப்பட்டது (எரிக்ஸன், ஹனா, வாக்கர்). சுமார் 6,000 கல்விசார் ஊழியர்களை மதிப்பிட்டதில் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தகாலமாகப் பல்கலைக்கழகங்களில் பெருநிறுவனமயமாக்கப்பட்ட நடவடிக்கைகள் கொடூரமான ஓர் அளவிடை முறையை உருவாக்கியுள்ளன என அங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது. மேலும் உயர்தரமான கற்பித்தல் மற்றும் ஆய்வுகளுக்குத் தடங்கலான அளவுக்கதிகமான வேலைப்பளு, கல்வி நடவடிக்கைகளில் கேள்விகள் எழுப்ப முடியாத அமைதிக் கலாசாரம், நிறுவன நிதிகளைத் தேவையற்ற திட்டங்களில் செலவிடும் உயர் நிர்வாகம், மற்றும் குறிப்பிடத்தக்க அளவு உளரீதியான பிரச்னைகள் எனப் பல்வேறு சிக்கல்கள் இத்துறையில் காணப்படுகின்றன.

இவ்வாறான ஒரு கட்டமைப்பைப் பின்பற்றும் எமது நாடும் இவ்வாய்வின் பெறுபேறுகளைக் கருத்தில் கொள்வது நல்லது.

**தரம் தொடர்பான கலந்துரையாடலில் உள்ளடங்காதோர்**

UGC இன் கீழுள்ள அரச பல்கலைக் கழகங்கள் மீதான அதீத கவனத்தால் நாட்டின் ஏனைய உயர் கல்வி நிலையங்கள் தர நிர்ணயத்திலிருந்து இலகுவாக விடுபடுகின்றன. இவ்வாறு வேறாக இயங்குவது பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் மட்டும் அல்ல. பௌத்த மற்றும் பாளி பல்கலைக் கழகம், இலங்கைப் பிக்குப் பல்கலைக் கழகம் ஆகிய இரு பௌத்த பல்கலை கழகங்கள் கல்வி அமைச்சின் கீழ் இயங்குவதோடு, தொழில் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சிகள் அமைச்சின் கீழ் தொழிற்பயிற்சித் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் இயங்கி வருகின்றது.

கம்பனிகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் “தனியார் பல்கலைக்கழகங்கள்“ வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கான வெளிப் பட்டங்களை வழங்கு கின்றன. வெளிநாட்டுப் பல்கலைக்கழ கம் ஒன்றினால் தீர்மானிக்கப்பட்ட பாடத்திட்டத்தை இவை இலங்கை மாணவர்களுக்குக் கற்பித்த போதும், உள்நாட்டில் இயங்கும் நிறுவனத்திற்கு இலங்கையில் இவ்வாறான பட்டங்களை வழங்குவதை நியாயப்படுத்து வதற்கான தேவை இல்லாதுள்ளது. இவ்வாறான பல்கலைக்கழகங்கள் எவையும் வெளியகக் கல்வி மதிப் பாய்வுகளுக்கோ, விரிவுரையாளர்கள், பாடத்திட் டம், கல்விமுறையின் தரம் மற்றும் குறைந்தளவு ஆய்வுகளில் ஈடுபடுவது தொடர்பான கேள்விகளுக்கோ உட்படுத்தப்படுவதில்லை.

**மாற்றத்துக்கான தேவை**

எமக்கு இங்கு தேவையாக இருப்பது உயர் கல்விக்கான ஒரு ஒருங்கிணைந்த தூரநோக்குடைய திட்டமாகும். இவ்வாறான திட்டமொன்று நாட்டின் நிதி ரீதியான மேம்பாட்டை மட்டுமல்லாது மக்களின் உணர்வு மற்றும் அறிவுசார் மேம்பாட்டையும் உள்ளடக்கியிருக்கும். இதில் முதன்மையான விடயமாக இருப்பது உயர் கல்விக்காக மேலும் நிதி ஒதுக்குதல் என்பதில் ஐயமில்லை. பட்டம் வழங்கும் அனைத்து நிறுவனங்களும் UGC இன்மைய அதிகாரத்தின் கீழ் இயங்கவோ அல்லது குறைந்த பட்சம் அதனால் இடையிடையே மதிப்பாய்வுக்குட்படுத்தப்படவோ வேண்டும். தரத்துக்கான மதிப்பீடுகளை அளவைகளைக் கொண்டு செய்ய முடியாது. ஏற்கனவே உள்ள தர உறுதிப்படுத்தல் நடைமுறைகள் அவற்றின் வெறும் படிவம் நிரப்பும், ஆவணம் பேணும் முறையிலிருந்து வெளிவந்து முழுமையான ஒரு தரத்தால் தரத்தை மதிப்பிடும் கட்டமைப்பிற்கு மாறவேண்டும்.

பொதுமக்கள் மத்தியிலான கலந்துரையாடல்களும் அவற்றின் எளிமையான வேலைக்காகக் கல்வி என்ற கருத்தை விடுத்து “கற்றறிந்தவர்” என்றால் யார் என்பது பற்றியும் அவ்வாறான ஒரு நபரை உருவாக்கப் பல்கலைக்கழகங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது நோக்கியும் திரும்ப வேண்டும். பொதுவாகக் கல்வியின், குறிப்பாகப் பல்கலைக்கழகக் கல்வியின் முக்கிய குறிக்கோளானது வெறும் வேலைகளையும் அதற்கான ஆற்றல்களையும் இணைப்பதாக இருக்கும் தன்மை மாற வேண்டும். ■

**கட்டுரையாளர்:**
**கலாநிதி கௌஷல்யா பெரேரா**
**கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பிரிவில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.**

**மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**



**உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணிதான் என்று ராமதாஸ் கூறியிருக்கிறார். அ.தி.மு.கவை பொறுத்தவரையில் பா.ம.க ஒரு தவிர்க்க முடியாத கூட்டணிக் கட்சி. 2021 ஆம் ஆண்டு தேர்தலில் 23 இடங்களோடு தங்களை எடப்பாடி பழனிசாமி நிறுத்திவிட்டார் என்ற ஆதங்கம் பா.ம.கவுக்கு இருக்கிறது.**

# ராமதாஸின் அறிவிப்பு பேரம்பேசும் உத்தியா?

**ஆ விஜயானந்த்**

“அடுத்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய கட்சிகளுடன் கூட்டணி இருக்காது” என பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் பேசியுள்ளார்.

“பா.ம.கவின் ஆட்சி அமைய வேண்டும் என்பதைவிட அன்புமணியின் ஆட்சி அமைய வேண்டும் என்பதையே ராமதாஸ் முன்வைக்கிறார். பரந்துபட்ட தமிழ்நாட்டுக்கான கட்சியாகவும் பா.ம.க இல்லை” என்கின்றனர் அரசியல் வல்லுநர்கள். ராமதாஸின் நோக்கம் ஈடேறுமா?

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் 23 இடங்களில் போட்டியிட்டு 5 இடங்களில் பாட்டாளி மக்கள் கட்சி வென்றது. இதன் பின்னர், தி.மு.க. அரசோடு பா.ம.க இணக்கமாகச் செல்வது போன்ற தோற்றம் தென்பட்டது.

வன்னியர் சாதிக்கான 10.5 சதவிகித இடஒதுக்கீட்டுக்கு அரசாணை வெளியிட்டதற்காக தி.மு.க அரசைப் பாராட்டவும் பா.ம.க தவறவில்லை.

இதனால், “உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க-பா.ம.க கூட்டணி தொடருமா?” என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில், தனியார் ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் ராமதாஸ் அளித்த பேட்டி அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

### மாற்றம், முன்னேற்றம், அன்புமணிதான்!

அந்தப் பேட்டியில், வேளாண் மைத் துறைக்காக தனி பட்ஜெட்டை வெளியிட்டதற்காக அரசை எத்தனை முறை வேண்டுமானாலும் பாராட்டலாம். பாட்டாளி மக்கள் கட்சிக்கும் அ.தி.மு.கவுக்குமான உறவு சுமூகமாக உள்ளது.

இந்தக் கூட்டணியில் எந்த விரிசலும் இல்லை. வன்னியர்களுக்கான 10.5 சதவிகித இடஒதுக்கீட்டினால் வட மாவட்டங்களிலும் சில பகுதிகளிலும் பாதிப்பு இருந்தது. இந்த இடஒதுக்கீடு தொடர்பாக பலருக்கும் புரிதல் இல்லை. இதற்கு எதிராகப் பேசும் அ.தி.மு.க தலைவர்களுக்கும் சமூகநீதி குறித்த புரிதல் இல்லை” என்றார்.

தொடர்ந்து பேசுகையில், “நாங்கள் உள்ளாட்சித் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். தற்போதைய கூட்டணியிலேயே தேர்தலை சந்திப்போம். எங்களின் இலக்கு 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதுதான். அந்தத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி இருக்காது. பாராளுமன்றத் தேர்தல் நேரத்தில் கூட்டணி குறித்து முடிவெடுப்போம்” எனக் கூறிவிட்டு, “அடுத்த சட்டமன்றத் தேர்தலில் மாற்றம், முன்னேற்றம், அன்புமணிதான்” என்றார்.

“ராமதாஸின் பேட்டியை எப்படி எடுத்துக் கொள்வது?” என அரசியல் ஆய்வாளர் ரவீந்திரன் துரைசாமியிடம் பிபிசி தமிழுக்காக கேட்டோம். “நான்கே முக்கால் வருடங்களுக்குப் பிறகு உள்ள நிலைப்பாட்டை இப்போது தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. இந்தக் கருத்து, மற்ற கட்சிகளுக்கு பா.ம.க மீது ஓர் அவநம்பிக்கையைத்தான் கொடுக்கும். டாக்டர் ராமதாஸ் அவசரப்பட்டுவிட்டார் என்றே தோன்றுகிறது” என்கிறார்.

“உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணிதான் என்று ராமதாஸ் கூறியிருக்கிறார். அ.தி.மு.கவை பொறுத்தவரையில் பா.ம.க ஒரு தவிர்க்க முடியாத கூட்டணிக் கட்சி. 2021 ஆம் ஆண்டு தேர்தலில் 23 இடங்களோடு தங்களை எடப்பாடி பழனிசாமி நிறுத்திவிட்டார் என்ற ஆதங்கம் பா.ம.கவுக்கு இருக்கிறது. அந்தத் தேர்தலில், “தி.மு.க கூட்டணிக்குள் பா.ம.க இல்லை” என்று முரசொலியில் கோடிட்டுக் காட்டியதால்தான் அ.தி.மு.க அணியில் குறைவான இடங்கள் கிடைத்தன.

மீண்டும், “அனைத்துக் கதவுகளும் திறந்திருக்கிறது” என்று கூறினால் அதிகப்படியான இடங்களைப் பெற முடியும் என்பதால், அதனை நோக்கி பா.ம.க காய்களை நகர்த்துவதாகவே பார்க்கிறேன். இது பலன் கொடுக்குமா என்பது போகப் போகத்தான் தெரியும்” என்கிறார்.

“ராமதாஸின் பேச்சை அவரே மதிப்பதில்லை என்பதுதான் உண்மை. ‘‘தேசியக் கட்சிகளோடும் திராவிடக் கட்சிகளோடும் கூட்டணி இல்லை“ என்றார். அந்தப் பேச்சை அவர் மதிக்காததால்தான் அவர்களோடு கூட்டணி வைத்தார். ‘‘எங்கள் குடும்பத்தில் இருந்து ஒருவர்கூட அரசியலுக்கு வர மாட்டார்” என்றார். அதனையும் அவர் மதிக்கவில்லை. தனது மகனுக்காகத்தான் அவர் அரசியலே செய்கிறார்.

“கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், பார் உள்ளளவும் பைந்தமிழ் உள்ளளவும் திராவிடக் கட்சிகளோடு கூட்டணி வைக்க மாட்டேன்” என்று கூறியதையும் அவர் மதிக்கவில்லை. அ.தி.மு.க அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தி ஆளுநரிடம் புகார் கொடுத்தார். அதனையும் அவர் மதிக்கவில்லை. ஒரு நம்பகத்தன்மையுள்ள கூட்டாளியாக அவர் இல்லை” என்கிறார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளரான வன்னியரசு.

தொடர்ந்து பிபிசி தமிழிடம் பேசிய அவர், “அரசியலில் இன்று தவிர்க்க முடியாத சக்தியாக வி.சி.க வளர்ந்து வருவதை பா.ம.க பார்க்கிறது. வன்னியர் சாதியைச் சேர்ந்தவர்களும் வி.சி.கவில் இணைந்து வருகின்றனர். அதற்கு திருப்போரூர் தொகுதியின் வெற்றியும் ஒரு காரணம். இதனை அறிந்து கொண்டு, “அரசியல் சக்தியாக வளர வேண்டும் என்றால் வி.சி.கவோடு இணக்கமாக இருக்க வேண்டும்” என ராமதாஸ் விரும்புகிறார்.

### தனிமைப்படுத்தப்படுகிறதா பா.ம.க?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அரசியல் சக்தியாகவும் தீர்மானிக்கக் கூடிய சக்தியாகவும் இருப்பது பொதுத்தளத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. கடந்த காலங்களில் சமூகரீதியாக வெறுப்பு அரசியலைப் பரப்பியதில் ராமதாஸுக்கு முக்கியப் பங்கு உண்டு. காதல் திருமணம் என்பது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வந்த பிறகு வரவில்லை. ஏதோ நாங்கள்தான் உருவாக்கியதாக பரப்புரையை மேற்கொண்டார். பா.ம.க என்பது நம்பத்தகுந்த அரசியல் கட்சி அல்ல.

ராமதாஸின் அரசியல் நிலைப்பாடு மாறாத வரையில் எந்த ஒட்டு உறவும் ஏற்படப் போவதில்லை. அவரோடு யாரும் அணி சேரவில்லையென்றால் அவர்களை வன்னிய மக்களுக்கு எதிரானவர்களாக பிரசாரம் செய்கிறார். வன்னிய மக்களின் வாழ்வுரிமையை மீட்டெடுக்கும் பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது. அவர்களுக்காக உழைக்கும் வேல்முருகனோடு நாங்கள் இணைந்து செயல்படுகிறோம். அந்த மக்களால் பா.ம.க தனிமைப்படுத்தப்படுவதால் தான் இப்படியொரு நிலையை எடுக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட் டுள்ளார்” என்கிறார்.

“மீண்டும் மாற்றம், முன்னேற்றம் என்ற பா.ம.கவின் முழக்கம் எடுபடுமா?” என மூத்த பத்திரிகையாளர் சிகாமணியிடம் பிபிசி தமிழுக்காக கேட்டோம். “தமிழ்நாடு அரசியல் என்பது ராமதாஸை மையமாக வைத்து நகரவில்லை.

தேர்தல் நேரத்தில் தனது நிலைப்பாடுகளை அவர் பலமுறை மாற்றியுள்ளார். கூட்டணி மாற்றங்களைச் செய்த வகையில் முதலிடம் பா.ம.கவுக்குத்தான் கிடைக்கும். அவரது மகன் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதற்காக ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறார். பா.ம.கவின் ஆட்சி என்பதைவிட அன்புமணியின் ஆட்சி அமைய வேண்டும் என்பதே அவரது விருப்பமாக உள்ளது” என்கிறார்.

### பேரத்துக்கான யுக்தியா?

தொடர்ந்து பேசியவர், ”பரந்துபட்ட தமிழ்நாட்டுக்கான கட்சியாக பா.ம.க இல்லை. 2016 தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு அவர்களால் 5 சதவீத வாக்குகளைப் பெற முடிந்தது. அனைத்துத் தரப்பு மக்களின் கட்சியாக எப்போது மாறும் எனத் தெரியவில்லை. தொடர்ந்து மக்களுக்கான போராட்டங்களை நடத்தி ஆதரவைப் பெருக்கலாம். வெறுமனே ஒருவரின் விருப்பம் மட்டுமே ஆட்சியை அமைக்க உதவப் போவதில்லை.

தமிழ்த் தேசிய உணர்வுகளைப் பேசிய கட்சி என்றாலும், வன்னியர்கள் என்ற நோக்கிலேயே செயல்பட்டு வருகிறது. அதனைக் குறிப்பிட்டால் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. அனைத்து நடவடிக்கைகளிலும், “பேரம்” என்ற அடிப்படையில் செயல்படும் சிறிய கட்சிகளைப் பார்க்கிறோம். அதனை ஒரு குற்றமாகவும் நான் பார்க்கவில்லை. தாங்கள் ஆசைப்படுவது நடக்கும் அளவுக்கு அவர்களின் நடவடிக்கைகள் அமைவதில்லை என்பதுதான் கள நிலவரம்” என்கிறார்.

“ராமதாஸின் முழக்கம் கட்சிக்குள் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?” என பா.ம.கவின் பிரசாரக் குழுவின் மாநிலத் தலைவர் எதிரொலி மணியனிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம். “மருத்துவரின் கருத்தை மிக வும் நியாயமான ஒன்றாகப் பார்க்கிறோம்.

2016 தேர்தலில் முன்னெடுத்த கொள்கையை மீண்டும் முன்னெடுப்பதால் மிகுந்த மகிழ்ச்சி. கட்சிக்காரர்கள் அனைவரும் உற்சாகத்தில் உள்ளனர். திராவிடக் கட்சிகளோடு தேசியக் கட்சிகளோடு கூட்டணி இல்லாமல் போனால் மிகுந்த வரவேற்பு கிடைக்கும். அந்தக் கொள்கையை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என விரும்புகிறோம். மற்றபடி விமர்சனங்களைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை” என்கிறார்.■

ஈழநாடு

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 1 மணித்தியாலம் 15 நிமிடம்

கல்வி tv CHANNEL

40) அசுத்தமான உணவு, அசுத்தமான நீர் போன்றவற்றால் ஏற்படக்கூடிய நோய்களைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
(1) கழிச்சல் நோய், சின்னமுத்து
(2) சீதபேதி, வாந்திபேதி
(3) கொலரா, கொப்பளிப்பான்

41) மஞ்சள் நிறத்துடன் நீல நிறத்தைச் சேர்த்தால் உருவாகும் நிறம் எது?
(1) பச்சை (2) ஊதா (3) கபிலம்

42) இலைக்கஞ்சி தயாரிக்க பயன்படும் இலை அல்லாதது
(1) சாத்தாவாரி (2) வல்லாரை (3) நன்னாரி

43) உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவு எது?
(1) பலாக்காய் (2) இறைச்சி (3) முருங்கையிலை

44) உலக மரபுரிமையாக கணிப்புப் பெற்ற மகாபோதி விருட்சம் அமைந்துள்ள மாகாணம் எது?
(1) மேல்மாகாணம் (2) மத்திய மாகாணம் (3) வடமத்தியமாகாணம்

45) உணவுப் பொருட்களை நீண்ட நேரம் அவிப்பதால் ஏற்படுவது
(1) போசனைக்கூறுகள் அழியும்
(2) பழுதடையும்
(3) போசணை அதிகரிக்கும்

46) தேசப்படத்தில் ஊதா நிறத்தினால் காட்டப்படுவது
(1) சிறுவீதிகள் (2) மலைகள் (3) அதிவேகநெடுஞ்சாலை

47) சிறிய பொருட்களை பெருபித்துப் பார்க்க உதவுவது
(1) கைவில்லை (2) ஊசித்துளைக்கமரா (3) இருவிழியன்

48) வீட்டிலுள்ள கத்தியைத் தீட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடியது
(1) பட்டடை (2) சாவணம் (3) உளி

49) கடற்பிரதேசத்தை அண்டிய மாவட்டம் அல்லாதது
(1) திருகோணமலை (2) கண்டி (3) யாழ்ப்பாணம்

50) பூச்சிகளை உணவாகக் கொள்ளும் தாவரம்
(1) கெண்டித்தாவரம் (2) கடுபுல் (3) மாமரம்

51) வெப்பம் விரைவாகப் பயணிப்பது
(1) உலோகங்களில் (2) பலகைகளில் (3) பிளாத்திக்குகளில்

52) கோள் மண்டலத்தில் மூன்றாவதாக காணப்படும் கோள்
(1) செவ்வாய் (2) பூமி (3) வெள்ளி

53) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அழைக்க வேண்டிய தொலைபேசி எண்
(1) 119 (2) 1929 (3) 1919

54) நீர்ப்பிரசாசைப் பயன்படுத்துபவர்கள்
(1) உழவர் (2) கொத்தன் (3) மேசன்

55) ஊசிதுளைக் கமராவில் தோன்றும் விம்பம் எப்படியானது?
(1) நிமிர்ந்த விம்பம் (2) தலைகீழான விம்பம் (3) தெளிவற்ற விம்பம்

56) மலட்டுத்தன்மை எப்போசனைக்குறைபாட்டால் ஏற்படுகின்றது.
(1) விற்றமின் C (2) விற்றமின் D (3) விற்றமின் E

57) கடல் நீரிலிருந்து கறியுப்பை வேறாக்கும் செயன்முறை இடம்பெறும் இடம்
(1) சுரங்கம் (2) உப்பளம் (3) பட்டளம்

58) பின்வருவனவற்றுள் இலத்திரனியல் ஊடகம் எது?
(1) கடிதம் (2) சுவரொட்டி (3) மின்னஞ்சல்

59) தேசப்படத்தில் E என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் வீதி வகை.
(1) பெருந்தெரு (2) அதிவேக நெடுஞ்சாலை (3) சிறுவீதி

60) "பிராணிகளிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ளும் படிப்பினை" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1. ..............................................................................................

..............................................................................................

2. ..............................................................................................

..............................................................................................

3. ..............................................................................................

..............................................................................................

❖ எழுத்துக்கள் உறுப்பமையவும், தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதப்பட்டிருப் பின் 2 புள்ளிகள் வழங்கப்படும்.

# சீனாவின் விளையாட்டுத்திடலாக ஆப்கான் மாறுவதற்குத் தலிபான் இடமளிக்கக்கூடாது

## மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஓக.18

**“கடந்த காலங்களில் இரு வல்லரசுகளின் போட்டியில் சீரழிந்த தம் வரலாற்றை மனதில் கொண்டு இப்போது மற்றுமொரு வல்லரசான சீனாவின் விளையாட்டுத் திடலாக ஆப்கன் மாற, தலிபான்கள் இடமளிக்கக் கூடாது. இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுடன் சமபல உறவுகளைப் பேணுவது தலிபான்களுக்கு உலக அங்கீகாரத்தைப் பெற்று தரும்.”**

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“தங்களது எதிர்காலத்தைத் தீர்மானித்துக்கொள்ள ஆப்கான் மக்களுக்கு உரிமை இருக்கின்றது. கடந்த பல பத்தாண்டுகளாக முதலில் அன்றைய சோவியத், பின்னர் இன்றைய அமெரிக்கா என்ற இரண்டு வல்லரசுகளின் விளையாட்டுத்திடலாக ஆப்கான் இருந்தது.

தலிபான், முஜாஹுதீன்களின் நிர்மாணத்துக்கே அமெரிக்கர்தான் பிள்ளையார் சுழி போட்டனர். ஆனால், இடைக்காலத்தில் தலிபான்களின் ஆட்சி ஒன்றும் சொல்லிக்கொள்ளும்படியாக இருக்கவில்லை. அனைத்துலகம் ஏற்றுக்கொண்டுள்ள மனித உரிமை பட்டயத்தை மிகவும் ஆவேசமாக அவர்கள் மீறினார்கள். அனைத்துமே மேற்கத்தேய ஊடாக அவப்பிரசாரம் என்று அவர்கள் இன்று பூசி மெழுக முடியாது. எனினும், இன்று காலம் அவர்களுக்குப் பாடம் படிப்பித்து இருக்கும் என நம்புவோம்.

வல்லாதிக்க நோக்கங்களுக்கு வெளியே தம் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க அப்பாவி ஆப்கான் மக்களுக்கு இருக்கின்ற உரிமையை, முதலில் ஆப்கான் ஆட்சியாளர்கள்தான், அவர்கள் எவராக இருந்தாலும் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் இரு வல்லரசுகளின் போட்டியில் சீரழிந்த தம் வரலாற்றை மனதில் கொண்டு இப்போது மற்றுமொரு வல்லரசான சீனாவின் விளையாட்டுத்திடலாக ஆப்கான் மாற, தலிபான்கள் இடமளிக்கக்கூடாது. இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுடன்சமபல உறவுகளைப்பேணுவது தலிபான்களுக்கு உலக அங்கீகாரத்தை பெற்று தரும்.

சமூக நீதி, சட்ட ஒழுங்கு, மனித உரிமைகள், குறிப்பாக கல்வி கற்பதற்கும், தொழில் செயவதற்குமான ஆப்கான் பெண்களின் உரிமை ஆகியவற்றை மதிப்பதன் மூலம், சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த ஆப்கான் மக்களுக்கு, இது “நம்ம ஆட்சி” என்ற நம்பிக்கையை ஏற்படுத்தத் தலிபான்கள் படிப்படியாக முன்வர வேண்டும்.

நாட்டை மீண்டும் அடிப்படைவாத 9ஆம் நூற்றாண்டுக்குக் கொண்டு சென்று, கடந்த 20ஆம் ஆண்டு கால அமெரிக்க ஆக்கிரமிப்பு ஆட்சியே பரவாயில்லை என ஆப்கான் இளைய தலைமுறை தீர்மானிக்கும் நிலைமையை, தலிபான்கள் ஏற்படுத்தக்கூடாது.

இல்லா விட்டால் இயல்பு வாழ்வு திரும்பாது. ஸ்திரமான ஆட்சியும் ஏற்படாது.

ஆகவே, ரஷ்யா, அமெரிக்கா போன்று சீனாவும் இன்னொரு சுற்று ஓடலாம். அது இறுதி சுற்றாகவும் மாறி விடலாம். அப்பாவி ஆப்கான் மக்கள் மத்தியில் இரத்த ஆறு இனியும்ஓடக்கூடாது.

“விடுதலைப்புலிகளுடன் எங்களுக்குத் தொடர்பிருக்கவில்லை” என்று இன்று தலிபான் பேச்சாளர் கூறுவது, இலங்கையில் ஒரு “ஒருநாள் செய்தி”. இது இங்கே பெரிதாக யாரையும், மகிழ்ச்சியிலோ கவலையிலோ, ஆழ்த்தவில்லை.

கடந்த இடைக்கால தலிபான் ஆட்சியில், “பாமியன்” உலக பௌத்த மரபுரிமை சின்னங்கள் குண்டால் தகர்க்கப்பட்டமை உண்மைதானே..!

இதுபோன்ற ஆவேச முட்டாள்தனங்களைச் செய்யாமல் ஆப்கான் மக்களின் உடனடித் தேவையான “நிம்மதி”யை பெற்றுத்தரும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழலை ஏற்படுத்தத் தலிபான்கள் முன்னுரிமை வழங்க வேண்டும். தமது மக்களை நேசிக்கும் பொறுப்புள்ள ஆட்சியாளராக தம்மை மாற்றிக்கொள்வதும், காட்டுவதும்தான், ஆப்கானை ஆக்கிரமித்திருந்த வல்லரசுகளுக்கு தலிபான்கள் தரக்கூடிய “செருப்படி”ஆகும் - என்றுள்ளது. (இ)

---

# கோட்டாபய அரசின் இரவு நேர ஊரடங்கு ஆந்தைகளுக்கும் வௌவால்களுக்குமா?

## முருத்தெட்டுவே தேரர் சீற்றத்துடன் கேள்வி

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான இந்த அரசு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது. மாகாண சபைத் தேர்தலொன்று நடத்தப்படுமானால் இது தெட்டத் தெளிவாக தெரியவரும். அதே போல் இரவுவேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது ஆந்தைகள் மற்றும் வௌவால்களுக்காகவா எனக் கேட்க விரும்புகின்றேன்.”

- இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”தற்போதைய ஆட்சியாளர்களுக்குத் தர்மம் என்றால் என்னவென்று புரியவில்லை. பிடிவாதப்போக்கில் ஆட்சியை முன்னெடுத்து வருகின்றனர். இந்த அரசுக்கு வாக்களித்த மக்கள் இன்று எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். தேரரே, உங்களை நம்பித்தானே வாக்களித்தோம், இன்று என்ன நடக்கின்றது எனக் கடும் விரக்தியை வெளியிடுவதுடன், அரசின் பயணம் மாற வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்.



காஸ் இருக்கின்றதா, கிழங்கு இருக்கின்றதா என அன்று மஹிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார். ஆனால், இன்று கேஸும் இல்லை, கிழங்கும் இல்லை. எமது பலத்தைக் காட்டவேண்டிய நேரம் தான் வந்துள்ளது.

இரவுவேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆந்தைகளுக்கும், வௌவால்களுக்குமா இவ்வாறு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது? ஆட்சியாளர்கள் மக்களின் மன நிலையை அறிந்து செயற்பட வேண்டும். மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்க வேண்டும்.

முடிந்தால் மாகாண சபை அல்லது பொதுத்தேர்தலை நடத்திப் பாருங்கள். அரசு மீது மக்களுக்குள்ள நம்பிக்கை என்னவென்பது தெளிவாகத் தெரியவரும்.” - என்றார். (இ)

---

# ஹட்டன் நகர சபை பிரிவில் 32 பேருக்கு கொரோனா!

ஹட்டன், ஓக. 18

ஹற்றன் - டிக்கோயா நகர சபையின் 11 ஊழியர்கள் உள்ளடங்களாக நகர சபைப் பிரிவில் 32 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் காரியாலயம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஹற்றன் - தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த 10 பேர், ஹற்றன் நகர சபைக்கு உட்பட்ட அரச வங்கியில் பணியாற்றும் 9 ஊழியர்கள் உள்ளடங்கலாக 32 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (இ)

---

## மாத்தளை வைத்தியசாலையில்

# தாதியர்கள் உள்ளிட்ட 44 பேருக்கு தொற்று

மாத்தளை, ஓக. 18

மாத்தளை பொது வைத்தியசாலையில் தாதியர்கள் உள்ளிட்ட 44 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

27 தாதியர்களும் சிற்றூழியர்கள் பிரிவில் 17 பேருக்கும் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான அனைவரும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வைத்தியசாலையில் சிறு சிறு குறைபாடுகள் காணப்பட்டாலும்கூட வைத்திய நடவடிக்கைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என வைத்தியசாலையின் பணிப்பாளர் நிஹால் வீரசூரிய ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு யோசனைகளை வைத்தியசாலையின் பணிப்பாளர் முன்வைத்துள்ளார் என்றும், அந்த யோசனைகளுக்கு அமைவாக வைத்திய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

---

# வல்வெட்டித்துறையில் நள்ளிரவு குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை

## குடும்ப தகராறு கத்திக் குத்தில் முடிந்தது

வடமராட்சி, ஓக. 18

குடும்பத் தகராறு காரணமாக இரண்டு பிள்ளைகளின் தந்தை கத்தியால் குத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயடைந்த நபர் உடனடியாக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

சுப்பிரமணியம் கிருஷாந் (வயது - 32) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ - 02)

# ஒரே ஒருவருக்கு தொற்று: முடங்குகிறது நியூஸிலாந்து

வெலிங்டன், ஓக. 18

நியூஸிலாந்து நாட்டில் ஒரே ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதை யடுத்து நாடு தழுவிய முடக்கத் துக்கு நியூஸிலாந்து அறிவிப்பு விடுத்துள்ளது.

புதிய தொற்றாளி ஒக்லாந்தில் அடையாளம் காணப்பட்டார். இவருக்கு கடந்த வியாழக்கிழமை தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அத்துடன், இவருக்கு டெல்டா திரிபு தொற்றி யிருக்கலாம் என்று அனுமானிக் கப்படுகின்றது.

இதனிடையே, தொற்று ஏற்பட்ட ஒக்லாந்து பகுதி 7 நாட் களுக்கும், நாட்டின் ஏனைய பகுதி கள் 3 நாட்களுக்கும் முழுமையாக முடக்கப்படவுள்ளது.

எனினும், பாடசாலைகள், அலு வலகங்கள் அத்தியாவசிய சேவை கள் செயல்படும். அனைத்து வணிக நிலையங்களும் மூடப்படும் என்று பிரதமர் ஜெசிந்தா அறிவித் துள்ளார்.

திடீர் முடக்கத்தை எதிர்பார்த் ததால் ஒக்லாந்தில் பல்பொருள் அங்காடிகளில் நெருக்கடி ஏற் பட்டது.

நாட்டின் எல்லையில் சமீபத் தைய வாரங்களில் அவதானிக்கப் பட்ட அனைத்து கோவிட் வழக் குகளும் டெல்டா என்றே காட் டியது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



33 வீதமானவர்கள் ஒரு டோஸ் தடுப்பூசியும், 20 வீத மக்கள் முழு மையான தடுப்பூசியையும் பெற் றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)



காபூலில் தொடர்கிறது துயரம்!

## ஆபத்துகளுக்கு மத்தியில் தப்பிக்க மக்கள் முயற்சி!

காபூல், ஓக. 18

ஆப்கானிஸ்தானிலிருந்து பல பொதுமக்கள் நாட்டைவிட்டு தப்பி செல்வது எப்படி என்பதை காட்டும் வியப்பூட்டும் படம் ஒன்று வெளியானது.

காபூல் விமான நிலையத்தில் குவிந்துள்ள ஆப் கானியர்கள் எந்த ஆவணங்களும் இன்றி வெளிநாடு களுக்கு தப்பிச் செல்ல முயல்கின்றனர். இவர்கள் விமானங்களில் ஏறி வெளிநாடுகளுக்கு செல்ல முயல் கின்றனர்.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை அமெரிக் காவின் இராணுவ விமானமான சி - 17இல் சுமார் 640 பொதுமக்கள் ஏறியிருந்தனர். இவர்கள் எவ்வாறு இதில் ஏறினர் என்பது தெரியவரவில்லை. 150 விமான வீரர்களையே சுமந்து செல்லவல்ல இந்த விமானத்தில் ஏறியவர்களை வெளியேற்ற முடியாத நிலை நிலவியது.


இதேசமயம், விமானம் ஓடுபாதையில் ஓடியபோது கூட விமானங்களில் அவர்கள் ஏற முயன்றனர். இதன் போது அமெரிக்க இராணுவத்தினர் நடத்திய துப்பாக் கிசூட்டில் ஐவர் உயிரிழந்தனர் என்று கூறப்படு கின்றது.

இந்த நிலையில், விமானத்தில் ஏறியவர்கள் இறங்க மறுத்தமையால் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் அவர்களை கட்டாருக்கு அழைத்து சென்றனர். இந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தி லேயே மூவர் விழுந்து உயிரிழந்தனர் என்று கூறப்படு கின்றது. இது தொடர்பான காணொலிகளும் வெளி யாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவுக்கான அச்சுறுத்தலை அகற்றவே ஆப்கானில் நுழைந்தோம்!

### அமெரிக்க ஜனாதிபதி உரை

வாஷிங்டன், ஓக. 16



நாங்கள் ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்காக நமது படைகளை அங்கு அனுப்பவில்லை. அமெரிக் காவுக்கான பெரும் அச்சுறுத் தலை அகற்றுகின்ற ஒரு குறிக் கோளுடன்தான் அங்கு கால் பதித்தோம். அது நிறைவேறி விட்டது இவ்வாறு தெரிவித் துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேற்றம் தொடர்பில் அமெரிக்கா மீது பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த நிலையில் நேற்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விசேட உரை ஒன்றை ஆற்றினார்.

அந்த உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்துடன் ஒஸாமா பின்லேடனையும் அல்கெய்டா வையும் அடக்கி ஒழித்த வரலாறை மட்டுமே அவர் தனது, உரையில் முதன்மைப்படுத்தினார்.

மேலும், ஆப்கானிஸ்தானின் அரசாங்கமும் அந்த மக்களும் இராணுவமும் தலிபான்களை எதிர்க்காத போது நாங்கள் மட்டும் எதற்காக அங்கு நின்று சண்டையிட வேண்டும் என்றும் கேள்வி எழுப்பினார். அமெரிக்கப் படை வெளியேற்றத்தை "மிகச்சிறந்த முடிவு" என்று திரும்பத் திரும்ப குறிப்பிட்டார். (ஐ)

## பிரான்ஸ் லூட்ஸ் மேரி ஆலயத்தில் 9 ஆயிரம் யாத்திரிகர் திரண்டனர்!

பாரிஸ், ஓக. 18

பிரான்ஸின் லூர்து மாதா தேவாலய வளா கத்தில் கொரோனா நெருக்கடி ளுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் முதன்முறையாக சுமார் ஒன்பது ஆயிரம் பேர் ஒன்றுகூடினர் என்று கூறப்பட்டது.

வைரஸ் நெருக்கடிக்கு முந்தைய காலப்பகு தியுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மிகக் குறைவு என்று தேவாலய நிர்வாகத்தினர் கூறியுள்ளனர். கன்னி மேரியின் விண்ணேற்பைக் குறிக்கின்ற பெரு நாளான நேற்றுமுன்தினம் அங்கு நடைபெற்ற பிரார்த்தனைகளில் பல்லா யிரக்கணக்ககான ரோமன் கத்தோலிக்க யாத்திரி கர்கள் பங்குபற்றினர்.

பிரான்ஸின் பல பகுதிகளிலும் இருந்து வேற்று மதத்தினரும் லூர்து மாதாவை தரிசிக்க வந்திருந்தனர். கடந்த பல மாத காலமாக உல கெங்கும் உள்ள லூர்து மேரி யாத்திரிகர்கள் ஆலய பூசை வழிபாடுகளை இணையம் மூலமே கண்டு வருகின்றனர். ஆனால், சமீப நாட்களாக அடியார்கள் ஆலயத்துக்கு நேரில் வருகை தருவது அதிகரித்துள்ளது.

1858 இல் மந்தை மேய்க்கும் சிறுமி ஒருத்திக்கு கன்னி மேரி நேரில் காட்சி கொடுத்ததாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து லூட்ஸ் வனப் பகுதி யாத்திரிகர்களின் முக்கிய ஸ்தலமாக மாறி யது. அங்குள்ள குகை ஒன்றில் தனக்கு மேரி மாதா

தரிசனமளித்தார் என்று அந்தச் சிறுமி கூறிய இடத்துக்கு உலகெங்கும் இருந்து நோயாளர்க ளும் யாத்திரிகர்களும் படையெடுத்து வருகை தரத் தொடங்கினர்.

கன்னி மேரி காட்சி கொடுத்த குகையின் சுவர்களைத் தொட்டு வணங்கி முத்தமிட்டால் தங்கள் நோய்கள்,பிணிகள் அகலும் என்ற நம்பிக்கை கத்தோலிக்க மக்களிடம் இன்றும் உள்ளது. பிரான்ஸிலும் ஏனைய நாடுகளிலும் புலம்பெயர்ந்து வசிக்கின்ற ஈழத் தமிழர்கள் பலரும் கூட ஆண்டுதோறும் லூட்ஸ் மாதாவைத் தரிசிப்பதற்காக வருகை தருகின்றனர்.





## ஹெய்ட்டி நிலநடுக்க பகுதியில் கடும் மழை பொழிய வாய்ப்பு!

### நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு எச்சரிக்கை மரணங்கள் மேலும் அதிகரிக்கும் அச்சம்

போர்ட் ஓ பிறின்ஸ், ஓக. 16

ஹெய்ட்டியில் நிலநடுக்கம் ஏற்பட்ட பிராந்தியத் தில் வெப்ப மண்டல தாக்கம் காரணமாக கடும் மழைப் பொழிவு ஏற்படவுள்ளது. சுமார் 250 மி. மீ. மழைவீழ்ச்சி பதிவாகலாம். இதனால் பெரும் வெள்ளப் பெருக்கும், நிலச்சரிவு அபாயமும் ஏற்பட வாய்ப்புள் ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நில நடுக்கத்தால் இதுவரை 1419 பேர் உயிரிழந்தனர். 6 ஆயிரத்து 900 பேருக்கும் அதிக மானவர்கள் காயமடைந்துள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மழை பெய்ய ஆரம்பித்தால் மீட்பு பணிகள் தாமதமடைவதுடன், மரணங்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

எனினும், வீதிகள் அழிவடைந்தமை, அமெரிக்கா, சில நாடுகளிலிருந்து மீட்பு படையினர் வருகை தாமதம் என்பவற்றால் மீட்பு பணிகள் பெரும் இடர்பாடுகளை சந்தித்துள்ளன.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல இடங்களை வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அயல் நாடுகளுக்கு இந்தத் தஞ்ச கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது. இதேவேளை, 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## நான்கு கார்கள், ஹெலியில் பணத்துடன் தப்பினார் கானி!

ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பியோடிய ஜனாதிபதி அஷ்ரப் கானி நான்கு கார்களிலும், ஹெலிகொப்டரிலும் பெருந்தொகை பணத்தை எடுத்துக் கொண்டு வெளியேறினார் என்று ரஷ்ய தூ தரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காபூல் நகரத்தை தலிபான்கள் முற்றுகையிட்டனர். போரில் இராணுவம் தோல்வியடைந்தமையை தொடர்ந்து அஷ்ரப் கானி பெருந்தொகை பணத்துடன் அங்கிருந்து தப்பினார் என்று கூறப்படுகின்றது.

மேலும், அவரின் அலுவலகத்தில் அவரால் எடுத்துமுடியாது விட்டுச் சென்ற பணமும் நிறைய சிதறிக் கிடந்தன என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# பந்துவீச்சாளர்கள் மாயஜாலம்: இந்திய அணி அதிசய வெற்றி!



லண்டன், ஓக. 18

பும்ரா, ஷமி, சிராஜ், இசாந்த் சர்மா ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சால் இங்கிலாந்து அணியை 151 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது இந்திய அணி.

இங்கிலாந்து - இந்திய அணிகள் இரண்டாவது டெஸ்ட் போட்டியை லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் விளையாடின.

இதில், இந்திய அணி முதல் இனிங்ஸில் 364 ஓட்டங்களும், இங்கிலாந்து அணி 391 ஓட்டங்களும் சேர்த்தன. இரண்டாவது இனிங்ஸில் இந்திய அணி 8 விக்கெட் இழப்புக்கு298 ஓட்டங்களை சேர்த்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. 272 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கியது இங்கிலாந்து அணி. ஆனால், 120 ஓட்டங்களுக்கு அந்த அணி சகல விக்கெட்களையும் இழந்து 151 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்த வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 0-1 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது. லோர்ட்ஸ் மைதானத்தில் இந்திய அணி இதற்கு முன் கடந்த 1986ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலும், 2014ஆம் ஆண்டு எம்.எஸ். டோனி தலைமையிலுமே வென்றிருந்தது.

தற்போது, 7 ஆண்டுகளுக்குப்பின் இப்போது கோலி தலைமையில் இந்திய அணி மீண்டும் வென்றுள்ளது. முதல் இனிங்ஸில் சதம் அடித்து மிகப்பெரிய ஓட்ட இலக்கை எட்டுவதற்கு உதவிய கே.எல்.ராகுலுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

இந்தியா தரப்பில் வெற்றிக்கு காரணமாக அமைந்த சிராஜ் 4 விக்கெட்களையும், இசாந்த் சர்மா 2 விக்கெட்களையும், பும்ரா 3 விக்கெட்களையும், ஷமி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

**ஷமியின் அரைசதம்**

ஆட்டத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் பும்ரா,ஷமியின் துடுப்பாட்டமும், ஷமி, பும்ரா, சிராஜ், சர்மா ஆகியோரின் பந்துவீச்சும்தான். அதிலும் 9ஆவது விக்கெட்டுக்கு பும்ரா, ஷமி இணைந்து 89 ஓட்டங்கள் சேர்த்து இந்திய அணி தோல்வியிலிருந்து மீட்டார்கள் என்றுதான் கூறலாம்.

**19 விக்கெட்கள்**

இந்த டெஸ்ட் போட்டியில் 19 விக்கெட்களையும் வேகப்பந்து வீச்சாளர்கள் மட்டுமே வீழ்த்தினர். இந்திய டெஸ்ட் வரலாற்றிலேயே வேகபந்து வீச்சாளர்கள் ஒரு டெஸ்டில் 20 விக்கெட்களையும் வீழ்த்துவது இது 3ஆவது முறையாகும். இதற்கு முன் கடந்த 2018ஆம் ஆண்டில் ஜொகன்னர்ஸ்பேர்க்கில் தென்னாபிரிக்காவுக்கு எதிராகவும், கடந்த முதல் டெஸ்டிலும் 20 விக்கெட்டுகளை வேகப்பந்துவீச்சாளர்கள் வீழ்த்தியிருந்தார்கள்.

**4 பேர்தான் காரணம்**

இந்திய அணிக்கு 7 ஆண்டுகளுக்குப் பின் லோர்ட்ஸ் மைதானத்தில் கிடைத்த வெற்றிக்கு ஒட்டுமொத்த உரித்தானவர்கள் பும்ரா, ஷமி, சிராஜ், சர்மா ஆகிய 4 பேர்தான் என்பதில் சந்தேகமில்லை. இந்த 4 வீரர்களும் அதிகபட்சமான பங்களிப்பு செய்யாமல் இருந்தால், மொத்தமுள்ள 7 பேரின் உழைப்பும் வீணாகியிருக்கும், ராகுல், ரோஹித் சர்மா, புஜாரா, ரஹானேயின் உழைப்பும் வீணாகியிருக்கும்.

**வெற்றிக்கு கோலி காரணமல்லர்**

விராட் கோலியின் சிறந்த தலைமைத்துவத்தால்தான் இந்த வெற்றி கிடைத்தது, அவரின் சாதுர்யமான முடிவு, களத்தடுப்பு வியூகத்தில்தான் வெற்றி கிடைத்தது என்று ஒட்டுமொத்த பெயரையும் கோலியிடம் தூக்கிக் கொடுத்துவிட முடியாது. கடந்த 2 டெஸ்ட் போட்டிகளிலும் கோலி என்ன பங்களிப்புச் செய்தார் என்பது தெரியும்.

விராட் கோலியைவிட ஷமி கடைசி வரிசையில் அருமையாக துடுப்பெடுத்தாடி அரைச்சதம் அடித்தார். டெய்ல் என்டர்கள்தானே என்று உதாசீனப்படுத்தாமல், பும்ராவும், ஷமியும் துடுப்பாட்டம் கற்றுக்கொடுத்துவிட்டு சென்றனர். ஒட்டுமொத்தத்தில் பும்ராவும், ஷமியும் துடுப்பாட்டத்தில் 89 ஓட்டங்கள் சேர்க்கவில்லையென்றால் இந்தியாவின் நிலைமை பரிதாபமாக மாறியிருக்கும்.

**பும்ரா ஷமி கூட்டணி**

ரிஷப் பந்த் 14 ஓட்டங்களிலும், இசாந்த் சர்மா 4 ஓட்டங்களிலும் நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ரிஷப் பந்த் 22 ஓட்டங்களில் ரொபின்சன் வெளியேறினார். அடுத்து ஷமி, சர்மாவுடன் சேர்ந்தார். இசாந்த் சர்மாவை 16 ஓட்டங்கள் ரொபின்சன் வீழ்த்தினார்.

ஆனால், 9-வது விக்கெட்டுக்கு ஷமி, பும்ரா கூட்டணி சேர்ந்து இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் அண்டர்சன், ரொபின்சன், வூட் சாம் கரன் ஆகியோருக்கு சிம்மசொப்பனமாக துடுப்பெடுத்தாடினர். அதிரடியாக ஆடிய ஷமி டெஸ்ட் அரங்கில் தனது 2ஆவது அரைசதத்தை நிறைவு செய்தார்.

பும்ரா நிதானமாக ஆட, ஷமி அதிரடியாக ஷாட்களை ஆடத் தொடங்கியவுடன் ரூட் களத்தடுப்பு வியூகத்தை மாற்றத் தொடங்கினார்.

**பழிவாங்கும் மனநிலையா?**

டெய்லன்டர்கள்தானே என நினைத்து பவுன்ஸர்களா வீசி ஷமி, பும்ராவை ஆட்டமிழக்க செய்ய பவுன்ஸர்களை வீசியது இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் செய்த தவறாகும். முதல் இனிங்ஸில் அண்டர்சன் ரொபின்சனுக்கு பவுன்ஸர் வீசி கழுத்து வரை ஏற்றியதற்காக பழிவாங்கும் மனநிலையோடுதான் இங்கிலாந்து வீரர்கள் பந்துவீசினர்.

ஆனால், எந்தவிதத்திலும் அது பலிக்கவில்லை. அண்டர்சன், ரொபின்சன் தேவையில்லாமல் பவுன்ஸர் வீசுகிறார்கள் எனத் தெரிந்து கோபமான ரூட் பெவிலியன் சென்றுவிட்டார். பும்ராவும், ஷமியும் நிலைத்து நின்று ஆடியதற்கு இங்கிலாந்தின் மோசமான பந்துவீச்சு முக்கிய காரணம். பும்ரா 34 ஓட்டங்களிலும், ஷமி 56 ஓட்டங்களும் சேர்த்தனர். மதிய உணவு இடைவேளைக்குப்பின் 10 நிமிடங்களில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக கோலி அறிவித்தார்.

**ஆரம்பமே அதிர்ச்சி**

60 ஓவர்களில் 272 ஓட்டங்கள் அடிக்க வேண்டிய இலக்கு இங்கிலாந்து அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. முதல் ஓவரிலேயே பும்ரா அசத்தினார். ஒரு பவுன்ஸரில் ரோரி பேர்ன்ஸ் விக்கெட்டை பும்ராவும், அருமையான லெக் கட்டரில் சிப்லி விக்கெட்டை ஷமியும் வீழ்த்தி இங்கிலாந்துக்கு அதிர்ச்சி அளித்தனர்.

ஹசீப் ஹமீது, ரூட் இருவரும் விக்கெட் சரிவைத் தடுக்க முயன்றனர். ஆனால், யோசிக்கவே முடியாத அளவுக்கு இசாந்த் சர்மா பந்தில் கால்காப்பில் பட்டு ஹமீது 9 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்துவந்த பெயர்ஸ்ரோவும் 2 ஓட்டங்களில் இசாந்த் சர்மா பந்தில் கால்காப்பில் பட்டு விக்கெட்டை இழந்தார்.

ஒவ்வொருவருராக ஆட்டமிழக்கவே, அணித் தலைவர் ரூட்டின் ஆணிவேர் பிடி நழுவத் தொடங்கியது. பும்ரா பந்துவீச்சில் 33 ஓட்டங்கள் சேர்த்தநிலையில் ரூட் ஸ்லிப்பில் கோலியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின் இந்தியப் பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்த வரிசையாக விக்கெட்கள் வீழ்ந்தன.

**விக்கெட் சரிவு**

போராடிய பட்லர்25 ஓட்டங்களில் சிராஜ் பந்துவீச்சில் வீழ்ந்தார். அதன்பின் மொயீன் அலி(13), சாம் கரன்(0), ரொபின்சன்(9) அண்டர்சன்(0) என மளமளவென விக்கெட்கள் சரிந்தன. 67 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்திருந்த இங்கிலாந்து அணி, அடுத்த 53 ஓட்டங்களுக்குள் மீதமிருந்த 7 விக்கெட்களையும் இழந்தது. 51.5 ஓவர்களில் 120 ஓட்டங்களில் ஆட்ட மிழந்து இங்கிலாந்து அணி தோல்வி அடைந்தது.




# ரி - 20 உலகக்கிண்ணம்: அட்டவணை வெளியானது!

## முதல் போட்டியில் பாக். - இந்தியா மோதல்

டுபாய், ஓக. 18

ஐக்கிய அரபு அமீரகத்தில் வரும் ஒக்ரோபர் மாதம் நடக்கவுள்ள 7ஆவது இருபது - 20 உலகக்கிண்ணத்துக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று வெளியிட்டது.

இதில் முதல் போட்டியிலேயே பரம வைரிகள் என்று வர்ணிக்கப்படும் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டி ஒக்ரோபர் 24 ஆம் திகதி இலங்கை நேரப்படி மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

2021ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி நிலவரப்படி அணி தரவரிசை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்கனவே, எட்டு அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள நான்கு இடங்களுக்கு தகுதி சுற்று நடைபெற உள்ளது.

தகுதி சுற்றில் இலங்கை, பங்களாதேஷ், அயர்லாந்து, நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து, நமீபியா, ஓமன் மற்றும் பப்புவா நியூகினி ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. இதில் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் உலகக்கிண்ண இருபது - 20 போட்டியில் விளையாட தகுதி பெறும். தகுதிச்சுற்றில் ஏ, பி, பிரிவு அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் ஏ , பி பிரிவில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 12 சுற்றுக்குத் தகுதி பெறும்.

**சுப்பர் 12 (குழு - 01)**

சுப்பர் - 12 சுற்றில் அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில், குழு 1 பிரிவில், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் அணிகளும் தகுதிச்சுற்றில் ஏ பிரிவில் முதலிடம் பெறும் அணியும், பி பிரிவில் 2ஆம் இடம் பெறும் அணியும் இடம் பெறும்.

**சுப்பர் 12 (குழு - 02)**

குழு - 02 பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, ஆப்கானிஸ்தான் அணிகளோடு பி பிரிவில் முதலிடம் பெறும் அணியும், ஏ பிரிவில் 2ஆம் இடம் பெறும் அணியும் இடம் பெறும்.

**தகுதி சுற்று**

தகுதி சுற்றில் இடம்பெற்றுள்ள அணிகளில்,

ஏ பிரிவு - இலங்கை, அயர்லாந்து, நெதர்லாந்து மற்றும் நமீபியா.

பி பிரிவு: பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து, பப்புவா நியூகினியா மற்றும் ஓமான்.

இந்த 8 அணிகளில் 4 அணிகள் சுப்பர் 12 போட்டிக்கு தகுதி பெறும்.

இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிகள் டுபாய் சர்வதேச மைதானம், அபுதாபியின் ஷேக் சயீத் மைதானம், ஷார்ஜா மைதானம் மற்றும் ஓமான் கிரிக்கெட் அக்கடமி மைதானங்களில் நடைபெறுகின்றன.

இந்த போட்டிகள் ஒக்ரோபர் 17ஆம் திகதி முதல் நவம்பர் 14 வரை போட்டிகள் நடைபெற உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசு இழைத்த தவறுகளால் செத்து மடிகின்றனர் மக்கள்

## போதிய அனுபவம் இல்லாவிட்டால் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என எதிரணி வலியுறுத்து



**கொழும்பு, ஓக.18**

**"கொரோனா தடுப்பூசிகளைத் துரிதமாகப் பெறுமாறு அரசை நாம் வலியுறுத்தும்போது பாணியின் பின்னால் ஓடினர். பானையை ஆற்றில் போட்டுக் கூத்துக் காட்டினர். அரசு இவ்வாறு இழைத்த தவறுகளால் மக்கள் இன்று செத்து மடிகின்றனர்."**

- இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

"மக்கள் உறங்கும்வேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பதில் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. இந்த அரசு மடத்தனமான முடிவுகளையே எடுக்கின்றது. தனக்குப் போதிய அனுபவம் இல்லாவிட்டால் முடியுமான ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஜனாதிபதி பதவி விலக வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு அக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"மிகவும் மோசமானதொரு காலகட்டத்திலேயே தற்போது இருக்கின்றோம். கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் தோல்வி கண்டுள்ள அரசு, ஊடகங்கள் வாயிலாக வேறு விதத்தில் பிரசாரம் முன்னெடுக்கின்றது. உண்மை அது வல்ல. மரண வீதத்தில் எமது நாடு முன்னிலை வகிக்கின்றது. மக்கள் வீடுகளுக்குள்ளேயே செத்து மடியும் நிலை ஏற்பட் டுள்ளதுடன் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் உச்சம் தொட்டுள்ளது.

இந்நிலையில், போலியான தகவல்களையும், தரவுகளையுமே அரசு வெளியிடுகின்றது. அவ்வாறு மோசடி செய்து மக்களைத் தவறாக வழிநடத்தாமல் உண்மை நிலவரத்தைத் தெளிவுபடுத்துமாறு அரசை வலியுறுத்துகின்றோம்.

அரச மருத்து அதிகாரி சங்கங்கள், பொதுச் சுகாதார அதிகாரி சங்கம் மற்றும் சுகாதார துறைசார்ந்தோர் நாட்டை முடக்குமாறு வலியுறுத்துகின்றனர். இதனைச் செய்யாமல், துறைசார் நிபுணர்களின் பரிந்துரைகளை ஏற்காமல் தனது இயலாமையை மூடிமறைப்பதற்காகவே போலித் தகவல்களை அரசு இவ்வாறு வெளியிட்டு வருகின்றது.

தடுப்பூசிகளைத் துரிதமாகப் பெறுமாறு அரசை நாம் வலியுறுத்தும்போது பாணியின் பின்னால் ஓடினர். பானையை ஆற்றில் போட்டுக் கூத்துக் காட்டினர். அரசு இவ்வாறு இழைத்த தவறுகளால் மக்கள் இன்று செத்து மடிகின்றனர்.

முதலாவது அலையின்போது நாட்டை மூடுமாறு வலியுறுத்தினோம். வேட்புமனுத் தாக்கல் வரை அரசு காத்திருந்தது. இரண்டாவது அலை ஏற்பட்ட போது அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் வரை அரசு மௌனம் காத்தது. தற்போது என்ன செய்யபோகின்றது எனத் தெரியவில்லை.

இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் தூங்கும் வேளையில் ஊரடங்கு பிறப்பிப்பதில் என்ன பயன்? இவ்வாறு ஊரடங்கு பிறப்பிப்பதும் ஒன்று, பிறப்பிக்காமல் இருப்பதும் ஒன்றுதான். எனவே, நாட்டை முடக்குமாறு அரசை வலியுறுத்துகின்றோம். நமது உயிரை நாமே பாதுகாத்துக் கொள்வோம்.

ஜனாதிபதி போதிய அனுபவம் இல்லாவிட்டால், முடியுமான ஒருவருக்குப் பொறுப்பை வழங்கிவிட்டுப் பதவி விலக வேண்டும்" - என்றார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 277 பேர் கைது!

கொழும்பு, ஓக. 18

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய மேலும் 277 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைப் பேணாமை போன்ற குற்றங்களுக்காக இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 54 ஆயிரத்து 889 ஆக உயர்வடைந்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறுவோரைக் கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், மேல் மாகாணத்தில் 12 வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வீதித்தடைகளைத் தாண்டிப் பயணிப்பதற்கு முயற்சித்த 330 வாகனங்களில் வந்த 635 பேர் நேற்றுமுன்தினம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தொழிலாளர் மத்தியில் விழிப்புணர்வு திட்டம்

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு



கண்டி , ஓக. 18

"தோட்டத் தொழிலாளர்களைத் திட்டமிட்ட அடிப்படையில் ஏமாற்றி, தொழில் சட்டங்களையும், நியதிகளையும் தோட்டக்கம்பனிகள் அப்பட்டமாக மீறிச் செயல்படுகின்றன. இவற்றைத் தடுப்பதற்கான தொழிற்சங்க பொறிமுறையும் திருப்திகரமானதாக இல்லை. எனவே, தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்."

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் எடுக்கப்பட்டது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் வெளியானது. இதன்பிரகாரம் அரச விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தொழிலாளர்கள், தொழில்செய்யும்பட்சத்தில் அவர்களுக்கு ஒன்றரை நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற சட்ட ஏற்பாடும் உள்ளது.

இந்நிலையில், குறித்த சட்ட ஏற்பாட்டை மீறி, நயவஞ்சக வேலைச் சூத்திரம், திட்டமிடல் ஊடாக தொழிலாளர்களின் தொழில்சார் உரிமையைத் தோட்டக் கம்பனிகள் மறுத்து வருவதுடன், மேற்படி வர்த்தமானி அறிவித்தலைக்கூட பல வீனமடையச் செய்துள்ளன.

அதாவது அரச விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதுடன், பறிக்கப்படும் கொழுந்தின் அளவுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. முறையாகப் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்கள்கூட ஒரு நாள் கைக்காசு தொழிலாளர்களாக மாற்றப்படுகின்றனர். புதிய நடைமுறை தொடர்பில் தொழிலாளர்களுக்கும் போதிய தெளிவின்மையால் இது தொடர்பில் அவர்கள் கேள்வி எழுப்புவதில்லை.

தாங்கள்தான் பெரிய தொழிற்சங்கம் என மார்தட்டிக்கொண்டு, கம்பனிகளுடன் உறவாடும், அரச பலமுடைய தொழிற்சங்கங்கள் இதனை கண்டுகொள்வதில்லை. கம்பனிகளின் அடாவடிகளைத் தட்டிக்கேட்பதில்லை. வர்த்தமானி அறிவித்தலைக்கூட பலவீனமானதாக மாற்றியமைத்துள்ள கம்பனிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டிலுள்ள சட்டக்கட்டமைப்பை, தொழில் நியதிகளைமீறிச் செயற்படுவதற்கான அதிகாரத்தை கம்பனிகளுக்கு வழங்கியது யார்?

இது தொடர்பில் தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தெளிவூட்டல்களை மேற்கொண்டு, சட்டரீதியாக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே தொழிற்சங்க பொறிமுறை செயற்பட வேண்டும். அதனை மையமாகக் கொண்டு செயற்படுவதற்கான எமது செயற்பாட்டு அணுகுமுறையை விரிவுபடுத்த வேண்டும்.

அதேவேளை, நெருக்கடியான சூழ்நிலையிலும் தோட்டத் தொழிலாளர்கள் தமது உழைப்பை வழங்கி வருகின்றனர். அவர்களின் அந்தத் தியாக உணர்வை அரசு மதிக்க வேண்டும். அவர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதில் உடனடியாக தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும். பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் தொழில் அமைச்சர்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்" - என்றுள்ளது. (இ)

# வார இறுதியில் முழுநேர ஊரடங்கு? ஆராய்ந்து வருகிறது அரச உயர்பீடம்

கொழும்பு, ஓக. 18

நாடு முழுவதும் தற்போது தினமும் இரவு 10 மணி தொடக்கம், அதிகாலை 4 மணிவரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் சனி மற்றும் ஞாயிறு வார இறுதி நாட்களில் முழுநேர ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்துவதற்கு அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாட்டில் 'டெல்டா' வைரஸ் பரவல் காரணமாக நாளாந்தம் 160 இற்கும் மேற்பட்ட கொரோனா மரணங்கள் பதிவாகிவரும் பின்னணியில் இவ்வாறு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வார இறுதி நாட்களிலும் முழுநேர ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்துவது தொடர்பிலேயே அரசு ஆராய்ந்து வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இலங்கை உள்ளிட்ட 16 நாடுகளுக்கான கட்டுப்பாட்டை இறுக்கிய ஹொங்கொங்

கொழும்பு, ஓக. 18

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக, இலங்கை உள்ளிட்ட 16 நாடுகளின் சுற்றுலாப் பயணிகள், தமது நாட்டுக்குப் பயணிப்பதற்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் ஹொங்கொங் மேலும் கடுமையாக்கவுள்ளது.

இலங்கைக்கு மேலதிகமாக, பங்களாதேஷ், கம்போடியா, ஃப்ரான்ஸ், கிறீஸ், ஈரான், மலேசியா, நெதர்லாந்து, ஸ்பெய்ன், சுவிட்சர்லாந்து, தன்சானியா, தாய்லாந்து, துருக்கி, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் அமெரிக்கா முதலான நாடுகளுக்கு இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளன.

இதற்மைய, இலங்கை உள்ளிட்ட 16 நாடுகளைச் சேர்ந்தவர்கள், ஹொங்கொங்குக்குள் உள்நுழையும்போது, இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளையும் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 21 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கும் உட்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# திவுலப்பிட்டி நகரின் வர்த்தக நிலையங்கள் நேற்றிலிருந்து மூடல்!

கம்பஹா, ஓக. 18

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், திவுலப்பிட்டி நகர் நேற்று முதல் எதிர்வரும் ஒரு வாரத்துக்கு மூடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே நகர் மூடப்பட்டுள்ளது.

நகரிலுள்ள அரச, தனியார் வங்கிகளைத் தவிர ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. (இ)

## இரு வாரங்கள்...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூல இரண்டாம் மதிப்பீட்டின் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்னைகளை தீர்த்துக்கொள்வோம். ஆனால், இந்த இடத்தில் தவறுகளை திருத்திக்கொண்டு பயணிக்க வேண்டும். எனினும் தவறுகளை ஏற்றுக்கொள்ள இப்போது யாரும் தயாராக இல்லை.

இந்த நேரத்தில் உலக சுகாதார ஸ்தாபனம் நாட்டில் நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை 6 ஆயிரமாகவும், மரணங்களின் எண்ணிக்கை 220 ஆகவும் அதிகரிக்கலாம் என்று எச்சரித்துள்ளது. அத்துடன் 2022 ஆகும்போது நாட்டில் மொத்த கொரோனா மரணங்கள் 30ஆயிரத்தை தாண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

ஆனால், குறிப்பிட்ட காலத்துக்கு நாட்டை முடக்கி செயல்பட்டால் 18ஆயிரம் மரணங்களில் இதனை தடுத்துக்கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது. நாடு என்றவகையில் மக்களின் உயிர்களை பாதுகாக்க நாங்கள் தயார்.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அனைத்து சுகாதார துறையினரும் நாட்டை இரண்டு வாரங்களுக்கு முடக்குமாறே தெரிவிக்கின்றனர். ஏனெனில், வைத்தியசாலைகளில் அனைத்து துறைகளிலும் சேவை செய்யும் ஊழியர்கள் மிகவும் கஷ்டத்துடனே செயல்பட்டு வருகின்றனர்.

கொரோனா சடலங்களை தகனம் செய்வதற்கு கொள்கலன்களில் ஏற்றிச் செல்வதை மனித நேயம் உள்ள எவராலும் தாங்கிக்கொள்ள முடியாது. மனிதாபிமானத்துடன் சிந்தித்து இது தொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டும். இதற்காக இரண்டு வாரங்களுக்கு நாட்டை முடக்குமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்போம். அவ்வாறு தீர்மானத்துக்கு வராவிட்டால் சுயாதீனமாக செயல்பட்டு மக்கள் தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு உயிர்களை பாதுகாத்துக்கொள்ளுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## ரணிலின்...

கோட்டாபய ராஜபக்ஷ சாதகமாகப் பரிசீலித்துள்ளார் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஐ. தே. க. தலைவரும் எம்.பியுமான ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி செயலகத்தில் நேற்று சந்தித்து பேசினார்.

இதன்போதே ஜனாதிபதி அவரின் கருத்தை ஏற்றுக் கொண்டார். அனைத்து கட்சி கூட்டத்தில் கொரோனா தொற்று பரவுவதை கட்டுப்படுத்துவது தொடர்பான பரிந்துரைகளை அரசியல் தலைவர்கள் முன்வைக்கலாம். ஐக்கிய தேசியக் கட்சி தனது முன்மொழிவுகளை ஏற்கனவே முன்வைத்துள்ளதையும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டினார்.

அத்துடன், கோவிட் 19 தொடர்பான வேறு சில பிரச்னைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

எனினும், அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு ஜனாதிபதி சாதகமாக இருந்தார். ஆனால், மாநாடு கூட்டப்படுமா என்பதை அவர் உறுதி செய்யவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கை தெரிவித்துள்ளது. (ஐ)

## 3,500ஐ...

ணிக்கை 3 இலட்சத்து 65 ஆயிரத்து 629 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 283 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 14 ஆயிரத்து 340 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## யாழ்ப்பாணத்தில்...

போதனா மருத்துவமனையில் 30 பேருக்கும், மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் 13 பேருக்கும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 11 பேருக்கும், சங்கானை மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், , ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், சண்டிலிப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவில் சங்கானை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், இளவளை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் என யாழ். மாவட்டத்தில் 69 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் 14 பேரும், பளை பிரதேச மருத்துவமனையில் 4 பேரும், தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் 4 பேரும், உருத்திரபுரம் பிரதேச மருத்துவமனையில் 2 பேரும் 24 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதேபோன்று, மன்னார் பொது மருத்துவமனையில் 13 பேருக்கும், மடு மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்குமாக மன்னார் மாவட்டத்தில் 20 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா பொது மருத்துவமனையில் ஐவர், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் மூவர், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவர், பாவற்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவர் என்று 10 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் 6 பேர் இனங்காணப்பட்டனர். இவை தவிர, இரணைமடு தனிமைப்படுத்தல் முாகமில் ஒருவருக்கும், காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒருவருக்கும் தொற்று அடையாளம் காணப்பட்டது. (ஐ)

## ரிஷாத் பேச...

கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூல இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ரிஷாத் பதியுதீன், எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் நான் கடந்த 116 நாட்களாக தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றேன். இதுதொடர்பாக ஜனாதிபதி சபையில் இருக்கும்போது நான் தெரிவித்த பின்னர் விரைவாக என்னை கோட்டை நீதிமன்றில் ஆஜர்படுத்தி, தற்போது சிறையில் அடைத்திருக்கின்றார்கள் என்று தொடர்ந்து பேசினார்.

அவரின் பேச்சின் இடையே எழுந்த சபைமுதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, நீதிமன்றில் விசாரிக்கப்பட்டுவரும் விடயங்களை சபையில் தெரிவிக்கவேண்டாம். பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் செயல்படவேண்டும். அவ்வாறு தெரிவிப்பதாக இருந்தால். சபாநாயகரிடம் பூரண அனுமதி பெற்றே பேச வேண்டும், என்றார். தொடர்ந்து, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் இதே கருத்தை வலியுறுத்தினார்.

இதையடுத்து எழுந்த எதிர்க் கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. பீ. அறிக்கை மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. பீ. அறிக்கை தொடர்பாக சபையில் கதைக்க முடியும். இதற்கு முன்னாள் சபாநாயகர்கள் இடமளித்திருக்கின்றார்கள். அதனால் அவரது நியாயத்தை தெரிவிப்பதற்கு இடமளிக்கவேண்டும் என்றார்

ஆனால் அரச தரப்பினர் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், சபாநாயகர், தற்போது அதற்கு இடமளிக்க நேரம் இல்லை. வேறு தினமொன்றில் கதைக்கலாம் என தெரிவித்து, ரிஷாத் பதியுதீனுக்கு பேசுவதற்கு இடமளிக்க மறுத்துவிட்டார்.

## ஒருபுறம்...

யாட்டம் பயங்கரமாக இடம்பெறுகின்றது. மக்கள் செத்து மடிந்து கொண்டிருக்கின்றனர். அதேவேளை, வடக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள பொன்னாலை என்ற கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 2 மணியளவில் இராணுவத்தினர் நுழைந்து ஆண், பெண், வயது வேறுபாடின்றி கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர். இது ஓர் இராணுவ வெறியாட்டம். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதேவேளை, கொரோனா உக்கிரமடைந்துள்ள நிலையில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளைப் பிணைகளிலாவது விடுவிக்குமாறு கோருகின்றோம். கொரோனாத் தொற்று காரணமாக அவர்களை உறவினர்கள் சென்று பார்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்களை அவர்களின் சொந்த மாவட்ட சிறைகளுக்கு மாற்றவும் மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கைதிகளும் அவர்களின் உற வினர்களும் உள ரீதியாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுக்குப் பிணை வழங்குங்கள்.

அடுத்ததாக, இலங்கைக்கு ஒட்சிசன் கொண்டு வருவதற்காக கப்பல் ஒன்று இந்தியா சென்றுள்ளது எனக் கூறப்படுகின்றது. இதேவேளை, யாழ். வைத்தியசாலையில் ஒட்சிசன் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் எனக் கோருகின்றேன்.

கொரோனா விடயத்தில் இராணுவத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை சுகாதாரத்துறையினருக்குக் கொடுங்கள். கொரோனாத் தடுப்பு செயலணியைத் தொடர்ந்தும் இராணுவம் வைத்திருக்குமேயானால் கொரோனாவை ஒருபோதுமே ஒழிக்க முடியாது. அமைச்சர்களை மாற்றினாலும் பயன் ஏற்படாது" - என்றார். (இ)

## தொற்றாளர்களால்...

னர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்கள் துன்பத்தின் பிடியில் வாழ்கின்றனர். தெருக்களில் விழுந்து சாகும் மக்களை இந்த நாடு சந்திக்கின்றது. இவ்வாறு ஒரு கொடிய நோயில் மக்கள் தெருக்களில் விழுந்து சாவார்களா? குடும்பம் குடும்பமாக கொரோனாத் தாக்கத்துக்குள்ளாகி அவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்களா என்று எதிர்பார்க்காதளவுக்கு இன்று இந்த நாட்டிலே மிகக் கூடியளவுக்கு கொரோனா தாக்கிக்கொண்டிருக்கின்றது.

நான் வாழ்கின்ற கிளிநொச்சி மாவட்டத்திலே இருக்கின்ற வைத்தியசாலைகள், கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்கள், உருவாக்கப்பட்ட வைத்திய சாலைகள் எங்கேயும் தொற்றாளர்களைப் பராமரிக்க இடமில்லை.

வடக்கு, கிழக்கில் அனைத்து வைத்தியசாலைகளும் கொரோனாத் தொற்றாளர்களால் நிரம்பி வழிகின்றன. வைத்தியசாலைகளில் உள்ள நோயாளர்களைப் பார்ர்க்கக்கூடியளவுக்கு தாதியர்களுக்கு, வைத்தியர்களுக்கு நேரமில்லை. ஏனைய நோயாளிகளைப் பார்வையிட முடியாதுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்களும் நிரம்பி வழிகின்றன.

இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்கள் தோறும் மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்திக்கின்றனர்" - என்றார். (இ)

## யாழில் நேற்றும்...

கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 57 வயது ஆண் ஒருவரும், பருத்தித்துறையை சேர்ந்த 75 வயது பெண்ணுமாக மூவர் இறந்தனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 185ஆக உயர்வடைந்தது. (ஐ-3)

## ஆங்கிலத்தில்...

யில் சபை கூடிய போது, கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு தொடர்பில் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

இதனை தொடர்ந்து ஒழுங்குபிரச்னையை முன்வைத்த ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான கவிந்து குமாரதுங்க,

நீங்கள் வழங்கிய நீதிமன்ற தீர்ப்பு ஆங்கில மொழியில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் 20 ஆவது திருத்தம் மற்றும் துறைமுக நகரம் தொடர்பான தீர்ப்பின் பிரதியும் ஆங்கிலத்திலேயே வழங்கப்பட்டது. இது பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமை மீறலாகும். இதற்கு முன்னர் இது தொடர்பில் அறிவித்துள்ளோம். தாய் மொழியில் பிரதியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றோம் என்றார்.

இதன்போது பதிலளித்த சபாநாயகர், நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்பை அவ்வாறே பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்குவதே வழமையாகும் - என்றார்.

இவ்வேளையில் எழுந்த சபை முதல்வர் தினேஸ் குணவர்த்தன, இந்த விடயத்தில் ஏற்கனவே நீதி அமைச்சர் அறிவித்துள்ளார். வழமையாக உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவ்வாறே வழங்கப்படும். எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கையெடுப்போம் என்று தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேசா விதானகே கூறுகையில்,

சட்டமூலம் ஜூலை மாதம் 6 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. இது ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இது திருட்டுவழியில் நீதிமன்றத்திற்கு சென்று வருகின்றது. இங்கு பெரும்பாலும் சிங்கள மொழியை பயன்படுத்துகின்றனர்.

இதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜய வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டிய விடயங்களும் உள்ளன. ஆனால், திருட்டு வழியில் நீதிமன்றத்திற்கு செல்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் மொழிகளில் வழங்குவதற்கு நிலையியல் கட்டளையில் ஏற்பாடுகள் உள்ளன. இப்படி இருக்கையில் தொற்று நிலைமையில் ஏன் வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றீர்கள். இவ்வாறான செயல்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று கேட்கின்றேன்.

இதேவேளை எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவிக்கையில்,

இந்த விடயங்களை தமிழ், சிங்களத்திலும் வழங்க வேண்டும். இந்த சட்டமூலத்தில் ஆபத்தான விடயங்களை அரசாங்கம் உள்ளடக்கியுள்ளது. திருட்டு வழியில் அதனை உள்ளடக்கியுள்ளது. மக்கள் அறிந்துகொள்ளவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துமாறு கேட்கின்றேன் என்றார்.

இந்நிலையில், சட்டமூலம் மீதான் விவாதத்தின் போது இதற்கு பதிலளித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, இதுதொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல்கள் மூன்று மொழிகளிலும் உள்ளன. ஆங்கில மொழியில் மட்டும் இல்லை என்பதை குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு கூற விரும்புகிறேன். நீதிமன்றின் தீர்ப்பைதான் ஆங்கிலத்தில் சமர்ப்பித்துள்ளோம். இந்தச் சட்டத்தை சவாலுக்கு உட்படுத்த வேண்டுமென்றால் உயர்நீதிமன்றத்திற்கு செல்ல முடியும். - என்றார்.

## ஒரே நாளில்...

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 171 பேரில் 102 ஆண்களும், 69 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் இருவர் 30 வயதுக்குட்பட்டவர். 23 ஆண்கள், 12 பெண்கள் என 35 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 134 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 77 ஆண்களும், 57 பெண்களும் அடங்குகின்றனர்.

ஈழநாடு
Eelanadu

# ஹெரோயினுடன் நால்வர் சிக்கினர்

கொழும்பு, ஓக. 18

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப் பொருள் சுற்றிவளைப்புகளில் ஹெரோயினுடன் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 30 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று ஹோக்கந்தர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹோக்கந்தர பிரசேதசத்தைச் சேர்ந்த 31 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹோக்கந்தர பிரசேத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 2 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். உனுவின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 04 . 1932



இறப்பு 15 . 08 . 2021

அமரர்

### செல்லத்துரை இராமசாமி

கொழும்பைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராமசாமி கடந்த (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி வைத்திலிங்கம் – லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி – அன்னமுத்து (அனலைதீவு) தம்பதியரின் அன்பு மருமகனும், கமலம் (அனலைதீவு) அவர்களின் அன்புக் கணவரும், சந்திரிக்கா, சிவகுமாரி, பிரேம் ஆகியோரின் அன்புத் தந்தையும், விசாலாட்சி, சந்தனம், செல்லையா, கணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,குணரட்ணம், கருணாநிதி, நிஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், நடராஜா, குமாரசாமி, இராஜரட்ணம்(அனலைதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விதுஷன், சுகன்யா, ஜனு, விபி, மிதுரி ஆகியோரின் அன்புப் பேரனும்,சயானா அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

**பார்வைக்காக**
Tuesday, 17 Aug 2021 5:00 PM - 9:00 PM
Brampton Crematorium & Visitation Centre 30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2, Canada

**தகனம்**
Wednesday, 18 Aug 2021 7:00 AM - 9:00 AM
Brampton Crematorium & Visitation Centre 30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**சிவா K - மகள்**
**Mobile : +16472226943**

தகவல்
**குடும்பத்தினர்.**

# தடுப்பூசி செலுத்துவதன் மூலம் மாத்திரம் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது!

## மக்கள் சுகாதார ஒழுங்குவிதியையும் முறையாக பின்பற்ற வேண்டும் என்கிறார் திஸ்ஸ விதாரண



**கொழும்பு, ஓக.18**

**"தடுப்பூசிகளின் மூலம் மாத்திரம் நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்திவிட முடியாது. மக்கள் சுகாதார ஒழுங்குவிதிகளை முறையாகப் பின்பற்றுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்."**

**- இவ்வாறு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஆபத்தான கொரோனா வைரஸின் திரிபான டெல்டா நாட்டில் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்த விடயத்தில் நாங்கள் ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொண்டு செல்லாது, அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக இந்தப் பிரச்னையில் செயற்பட வேண்டும்.

இந்த வைரஸ் எமது நாட்டில் வேகமாகப் பரவி வருகின்றது. டெல்டா என்ற திரிபு உருவான பின்னர் இது வேகமாகப் பரவி வருகின்றது.

இதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக நாங்கள் சிந்திக்க வேண்டும். இது ஒரு நபரில் இருந்து இன்னொரு நபருக்குப் பரவுகின்றது. இது தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். ஆனால், அரசு முன்னெடுக்கும் நடவடிக்கை போதுமானது இல்லை. கிராமிய மட்டத்தில் இது தொடர்பில் தெளிவுபடுத்தல்களை முன்னெடுக்க வேண்டும். அப்போதே மக்களிடையே இது தொடர்பில் தெளிவு ஏற்படும்.

எமது நாடு இப்போது சாதாரண நிலைமையில் இருக்கும் நாட்டைப் போன்றே இருக்கின்றது. இவ்வாறு இல்லாது தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தத் தேவையான சுகாதார ஒழுங்குவிதிகளை அனைவரும் தமது பாதுகாப்புக் கருதி பின்பற்ற வேண்டும்.

அனைத்து வகையான தடுப்பூசிகளிலும் ஒரு டோஸ் வழங்குவது போதுமானது அல்ல. குறைந்தது இரண்டு டோஸ்களை வழங்க வேண்டும். எனினும், தடுப்பூசியால் மட்டும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது. இதனால் எமது நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

இதேவேளை, இந்த விடயத்தில் பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளில் குழுவை அமைத்து அந்தக் குழுவின் மூலம் சுகாதார அமைச்சருடன் தொடர்பை ஏற்படுத்தி நாட்டில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும்" - என்றார். (இ)

# இறக்குவானை நகருக்கும் பூட்டு

கொழும்பு, ஓக. 18

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில், இறக்குவானை நகரிலுள்ள வர்த் தக நிலையங்களை பூட்டுவ தற்கு பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, இன்று முதல் மீள் அறிவிப்பு வரை இறக்கு வானை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக இறக்குவானை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வங்கிகள், அத்தியாவசிய மொத்த விற்பனை நிலையங்களை தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த் தக நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இறக்குவானையில் தொடர்ச்சியாக நூற்றுக்கணக் கான கொரோனா நோயாளர் கள் அடையாளம் காணப்பட்டு வருவதாக பிரதேச சுகா தார பரிசோதகர் குறிப்பிட்டார்.

# கம்பஹாவில் தீவிரமடையும் கொரோனா; மேலும் 1,208 தொற்றாளர்கள் அடையாளம்

## மூன்றாம் அலையில் 92,222 பேர் பாதிப்பு

கம்பஹா, ஓக. 18

கம்பஹா மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 1,208 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளன் என்று மாவட்ட சுகாதார சேவைகள் காரியாலயம் நேற்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக குறித்த மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாம் அலை யில் இனங்காணப் பட்ட தொற்றாளர்க ளின் எண்ணிக்கை 92 ஆயிரத்து 222 ஆக உயர்வடைந்துள்ளது.

மஹர சுகாதார பிரிவிலேயே அதிகளவான தொற்றாளர்கள் இனங் காணப்பட் டுள்ளனர்.

இதற்கமைவாக ஜா - எல சுகாதாரப் பிரிவில் 184 தொற் றாளர்களும், கம்பஹா சுகாதாரப் பிரிவில் 136 தொற்றாளர்களும், மினுவாங்கொடை சுகாதாரப் பிரிவில் 133 தொற்றாளர்களும், பியகம சுகா தாரப் பிரிவில் 123 தொற்றாளர்க ளும், களனி சுகாதாரப் பிரிவில் 99 தொற்றாளர்களும், திவுலப்பிட்டிய சுகாதாரப் பிரிவில் 96 தொற்றாளர்களும், ராகம சுகா தாரப் பிரிவில் 55 தொற்றாளர்க ளும் இனங்காணப்பட்டுள்ளனர்.

தொம்பே சுகாதாரப் பிரிவில் 53 தொற்றாளர்களும், அத்தனகல்ல சுகாதாரப் பிரிவில் 50 தொற்றாளர்களும், சீதுவ சுகாதாரப் பிரிவில் 11 தொற்றாளர்களும் இனங்காணப் பட்டுள்ளனர்.

மீரிகம சுகாதாரப் பிரிவில் 9 தொற்றாளர்களும், நீர்கொழும்பு சுகாதாரப் பிரிவில் 5 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் ஆடைத்தொழிற்சாலை தொற்றாளர்கள் 61 பேர் கம்பஹா மாவட்டத் தில் இனங்காணப்பட்டுள்ளனர். (இ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-முகமூடி,சத்யம் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதி- ராகினி இராமலிங்கம் யாழ் மாநகர சபை உறுப்பினர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : நேருக்கு நேர்

---

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு